விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 2 ஸபர் 12 இதழ் 277
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-11-83

# கோவை மகேசன் விடுதலை

(இரா. துரைரத்தினம்)

அவசரகாலச் சட்டத்தின் கீழ்க் கைதாகி, சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ஈழ விடுதலை அணி அமைப்புச் செயலாளர் கோவை மகேசன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை மேலிடத்திலிருந்து மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

தம்மை யாழ்ப்பாணத்தில் கொண்டு போய் விடுமாறு கோவை மகேசன் கோரியதைத் தொடர்ந்து நேற்றுக் காலை 'ஜீப்' வண்டியில் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த இவர், அங்கு நடந்த சம்பவத்தின்பின் மட்டக்களப்பச்சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். செப்டம்பர் 23ம் திகதி மட்டக்களப்புச் சிறை உடைப்பின்போது இவர் வெளியேறவில்லை. (க)

## வீடு திரும்பினர்

(ஏ. வி. மாணிக்கம்)

திரு. கோவை மகேசன் நேற்றுப் பகல் 2-30 மணிக்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு விடுதலையாகி, அங்கிருந்து கோப்பாயிலுள்ள தமது இல்லத்தை

(10-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கை திரும்பவுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும்"

## இந்திய பாராளுமன்றத்தில் நரசிம்மராவ்

[புதுடில்லி]

"இலங்கையில் கடந்த ஜுலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரங்களையடுத்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த இலங்கையர்கள் மீண்டும் அங்கு திரும்பிச்சென்று வேலைசெய்வதற்கான பாதுகாப்பையும், வாழ்க்கை நிலையையும் அந்நாட்டு அரசு உறுதிப்படுத்த வேண்டும்".

இவ்வாறு இந்திய வெளநாட்டு அமைச்சர் திரு.பி.வி. நரசிம்மராவ் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்திய லோகசபாவில் நடைபெற்றுவரும் விவாதத்திற்கு நேற்றுப் பதிலளித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதையே இந்திய அரசு விரும்புகிறது. இனக்கலவரத்தினல் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்துவந்த இலங்கையர்கள் விரைவில் அங்கு திரும்பி விடுவார்கள்.

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்த

(10ம் பக்கம் பார்க்க)

# பார்த்தசாரதி - தொண்டா - சிவா - அமிர் - சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி நேற்றுப் புதுடில்லியில் இலங்கைத் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தைகளில் லண்டனிலிருந்துவந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், சென்னையிலிருந்து புதுடில்லி வந்த கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், கொழும்பிலிருந்து புதுடில்லிவந்த இலங்கையின் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# "சிறுபான்மையினர் உரிமை: சமமாகப் பேணவேண்டும்!"

## பட்ஜட் விவாதத்தில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

(இ. கந்தசாமி)

"பாராளுமன்றத்தில் தமிழ் சிறுபான்மை மக்கள் இன்று இல்லாதிருக்கின்றனர். அவர்களின் பிரதிநிதித்துவம் தேவையில்லை என்ற ஒரு நிலைமை ஏற்பட அரசு இடமளிக்கக் கூடாது, சிறுபான்மை மக்களின் உரிமைகள் சமநிலையில் பேணப்பட வேண்டும். இதனையே சுதந்திரக்கட்சி எதிர்பார்க்கிறது"

இவ்வாறு எதிர்க்கட்சியின் சார்பில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்றுப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

'பட்ஜட்' விவாதம் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

எதிர்க்கட்சியின் சார்பில் அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினர்.

அவர் மேலும் கூறியதாவது:

'திருகோணமலை இடைத் தேர்தல் நடக்கக்கூடிய சூழ்நிலை உண்டா? பிரச்னை தீருமா? மேலும் சிக்கல்கள் ஏற்படுமா?' என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

'தேர்தல் நடாத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இருக்கிறதா? தமிழ் மக்கள் பிரச்னை தீர இடமளிப்பதன் மூலமே இந்நாட்டில் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்.

(10ம் பக்கம் பார்க்க)

# 16 லட்சம் ரூபா கொள்ளை!

(கொழும்பு)

யாழ். பிரதம தபாலகத்தில் இம்மாதம் 14-ம் திகதி ஆயுதம் தாங்கிய சிலரினல் 13 லட்சத்து 92,000 ரூபா

(10-ம் பக்கம் பார்க்க)

# "வடக்கு சம்பவங்களுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு கிடையாது"

## பட்ஜட் விவாதத்தில் லலித்

(கொழும்பு)

"வடபகுதி சம்பவங்களுக்கும், இந்தியாவுக்கும் தொடர்பு கிடையாது" என்று அரசாங்க தரப்பில்வர்த்தகஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி 'பட்ஜட்' விவாதத்தின்போது கூறினர்.

திரு. அத்துலத் முதலி தொடர்ந்து கூறியதாவது: "தமிழர் பிரச்னைபற்றி சுதந்திரக் கட்சி லக்ஷ்மன் ஜெயக்கொடி இங்கு ஏதோ கூறினர். ஆனல் அவர் ஏன் சர்வகட்சி மகாநாட்டில் இதனைக் கூறவில்லை. இனி

[10-ம் பக்கம் பார்க்க]

நாளை ஆரம்பம்

.84 Aug. A/L விஞ்ஞானம்
வார இறுதி வகுப்பு

சனி, ஞாயிறு

7-00 முளையவியல் - நாகநாதன்
8-00 வெப்பவியல் - வர்ணம்
9-00 சேதன இரசாயனம் - ஜெகன்
10-00 உடற்தொழிலியல் - ரவிகுமார்
10-00 நுண்கணிதம் } கிருஷ்ணு
11-15 கணத்தாக்கு }

MASTER
INSTITUTES
B. M. C. LANE, JAFFNA.

9993

# இந்திராவுடன் தமிழர் பிரச்னைபற்றி ஆலோசிப்பேன்

## உதவி அரசாங்க அதிபர்கள் மத்தியில் ஜனதிபதி

(இ. கந்தசாமி)

"இம்மாதம் 21-ம் திகதி பொதுநல நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் புதுடில்லிக்குச் செல்கிறேன். அங்கு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியுடன் இலங்கையிலுள்ள தமிழர்கள் பிரச்னைபற்றி ஆலோசிப்பேன்.

இந்த நாட்டில் இலங்கையரும் இந்தியருமான தமிழர்கள் 15 வீதத்தினர் வாழ்கின்றனர். இவர்கள் விடயத்தில் இந்திய

(10ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

98ம் இலக்கம்செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம், கல்விக் கந்தோருக்கு முன்பாகவீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு பிரித்தும் விற்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும். 9973

இல: 372, பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட்டில் 330 சதுரஅடி பரப்புள்ளகடை விற்பனைக்குண்டு. விபரம் நேரில் 959

உடுவில் Dutch Road ல் Man's School க்கு அருகாமையில் 6 டரப்பு காணி கிணற்றுடனும் அரைவாசி கட்டப்பட்ட வீட்டுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு:- A. T. பாலச்சந்திரன் அளவெட்டி தெற்கு அளவெட்டி அல்லது N. S. தப்பிராஜா தொலைபேசி: 22628 (9 82)

புனரமைக்கப்பட்ட ISUZU மினி பஸ்களும், டிரக்குகளும் (Trucks) விற்பனைக்குண்டு. ELF 250 (தனிச்சக்கரம்/இரண்டு சக்கரம்)' · ELF 350 (KS 21 / 31 - அரை பொடி). ELF 150 / 250-15 ஆசன மினி பஸ்கள் (Low and High Roof Buses) வாங்க விரும்புவோருக்கு பினன்ஸ் வசதி செய்து தரப்படும். Inter Truck Company, 37, நக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 9884

யாழ். நகர் நாச்சிமார் கோயிலடி 561 K K S வீதியிலுள்ள வீடுஉடனே விற்பனைக்குண்டு. 3 8/1பரப்பு விலை 8½. தரகர் வேண்டாம்- Dr. T. இரத்தினசிங்கம், ''மாரக்காய்'' புலோலி தெற்கு, புலோலி. 9906

உடன் விற்பனைக்கு Electric Shaver, Polaraid Camera, பாவனையில் உள்ள Nichchi எலெக்றிக் தையல் மெசின் தொடர்பு: இந்திரமோகன், வேலைக்கை ரோட், மானிப்பாய். 9934

## கேள்விப் பத்திரம் கோரல்

வண்ணை கோம்பயன் மணல் மயானத்தில் சாம்பல் பிட்டி அரிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழு விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 26-11-83ம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும். நிர்வாகி, கோம்பயன்மணல் மயானம், 24, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 9964

## பிறந்த தின வாழ்த்து

**- விக்னபாலன் -**

யாழ்ப்பாணம் · ஈச்ச மோட்டையைச் சேர்ந்த செல்லக்கண்டு விக்னபாலன் தமது முப்பத்திரண்டாவது பிறந்த தினத்தை இன்று (18-1 1-83) வெள்ளிக்கிழமை தமது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார். இவரை இவரது ஐயா, அம்மா, மனைவி, பிள்ளைகள் தயா, சுரேன், ரகு மற்றும் ஆனந்தி, கிளி அக்கா, மாஜி அக்கா, சவுதி பிலிப் அண்ணு ஆகியோர் பல்லாண்டு காலம் சகல செல்வமும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர். 9970

## தேவை

பாண்வேலை தெரிந்தவர் வாஸ் ஒருவரும், டெலிவரி செய்வதற்குச் சைக்கிள் ஓடத் தெரிந்த ஒருவரும் தேவை. உடன் நேரில் வரவும் நியூ பாரத் பேக்ஹவுஸ் பெற்றோலியக் கூட்டுத்ஸ்தாபன அருகாமை 86 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9956

காணி தேவை நாவற்குளி, சாவகச்சேரி, அரியாலை, உடுவில் ஆகிய இடங்களில் வீடு கட்டக்கூடிய காணிகள் தேவை. விபரங்களுக்கு:- JAFFNA PROPERTY TRADES LTD, 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம் போன்: 23698. (9968)

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்துகொள்முதல்செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone 23131. (9952)

வர்த்தக நிறுவனமொன்றிற்கு எஸ் லோன் பைப்பில் பிற்றிங்ஸ் (Bend, Socket) மற்றும் பொருட்கள் தொகையாக செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த தொழிலாளர் உடன் தேவை. கூடியசம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல 9937, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9937

இரும்பு கிறில் கேற் வேலை அனுபவம் கொண்ட வெல்டர், சேர்விஸ் ஸ்ரேசன் வாசர் கிறீசர் வேலை அனுபவம் கொண்டவர்கள் தேவை. பரஸ்கோ பருத்தித்துறைவீதி, நல்லூர். 9911

## WANTED

Vacancies exsist for Security Guard to Serve in Jaffna: Chavakachcheri, Kilinochchi; Mannar, Point pedro. Ex. Service man, Ex. Policeman- Ex. Govt. Servants. with Knowledge of English. who are smart and fit. May apply with Copies of Testimonials and two Copies of Passport size photos. Application closes on 25-11-83. Advt. No 9929 C/o Eelanadu, Jaffna. 9929

A Male teacher above the age of 45 is wanted to teach full time, 2 children at home in English Medium the foll wing subjects English, Maths, Environmental Studies for standards 2 and 3 selected teacher will be taken abroad with the childern and provided with free food, accomodation air passage and medical facilities in addition to appropriate salary. salary for teaching abroad will be decided on the performance for the 1st 2 months please apply immediately with full particulars at the first instance please contact the above address: ''VALLIAM-PATHY" 115 (A) COLOMBOGAM RD, JAFFNA. 9974

## சேவை

டெலிக்கா வான் வாடகைக்கு விடப்படும். தினசரி அல்லது மாதாந்த வாடகைக்கு விடப்படும் விபரங்களுக்கு கு.குலேந்திரன் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 9984

## தேவை

யாழ். நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தோடம் பழ இனிப்பு, கட்போல்ஸ் போன்ற இனிப்புவகைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- கற்பூரவில்லைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- சில்லறை வியாபாரத்தில் பில்போடக் கூடிய அனுபவம் பெற்றவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 26-11-83க்கு முன் விண்ணப்பிக்கவும், விண்ணப்பங்களைத் தனித்தனியாக அனுப்பிவைக்கவும். விளம்பர இல: 9963 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9963

## பயிற்சி

அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்வாய்ந்த சான்றிதழுக்குரிய ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J, E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9954

## கல்வி

ரேடியோ, T. V. தொழில்நுட்ப வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்பெற்ற சான்றிதழைப் பெறுவதோடு இரண்டு அலைவரிசைகளைக் கொண்ட ஒரு வானொலிப் பெட்டிக்கும் சொந்தக்காரராகுங்கள். விபரங்கட்கு: J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9953

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில்

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கர ஆசாரி முத்துஆசாரி கருப்பையா ஆசாரியின் மரணசாசன சொத்தின் விடயத்தில்.
-மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. T/8/83

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த கறுப்பையா ஆசாரி இராமகிருஷ்ண
மனுதார்.

எதிர்

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த

1. கருப்பையா ஆசாரி அச்சுதன்
2. கருப்பையா ஆசாரி சுந்தராம்பால்
3. கருப்பையா ஆசாரி கைம்பெண் சோலை அம்மா

-பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாசனத்தைநிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஐப்பசி மீ 4-ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
**மு. பத்மநாதன்,**
பதிவாளர்.

மன்னார்.

4-10-83 காரணம் காட்டும் திகதி 22-11-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
**மு. பத்மநாதன்,**
பதிவாளர்.

9915


உங்கள் பணத்துக்கு வருடமொன்றுக்கு
**26% தொடக்கம் 30% வரை**
வட்டி கொடுக்கப்படும்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

**எங்கள் இன்றைய வெளியீடு!**
★ மோகன் ★ நளினி ★ மனோரமா
நடித்த ★ **சரணாலயம்**
(V. G. P. original) கலர்
★ சிவகுமார் ★ லட்சுமி நடித்த
★ **தண்டிக்கப்பட்ட நியாயங்கள்**
(V. G. P. original) கலர்
சொற்ப மூலப்பிரதிகளே கைவசம் உள்ளதனால்
உங்கள் ஓடர்களை உடன்
பதிவுசெய்துகொள்ளுங்கள்.
மேலும் புதிய வெளியீடுகளை
விரைவில் எதிர்பாருங்கள்.
**குணம் வீடியோ சென்டர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(9986) தொலைபேசி: 23665


## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் ருதிரோற்காரி வருஷம் கார்த்திகை மாதம் 5ம் நாள் (21-11-83) திங்கட்கிழமை காலை 10-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது கனிஷ்ட புத்திரன் திருநிறைச்செல்வன் **ரஞ்சிட்** (ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் திருச்சபை போதகர்) அவர்களுக்கும் | எமது கனிஷ்ட புதல்வி திருநிறைச்செல்வி **அருள்மலர்** அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்து மேற்படி திருமணம் 850, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் திருமண வைபவத்தில் இஷ்டமித்திர பந்துக்களாக பங்குகொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி G. செல்வமலர் எமேர்சன், 101, டச்றோட், உடுவில், சுன்னுகம். | J. செல்வராஜா தம்பதிகள் 850, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |

(9948)


சுன்னுகத்தில்
**இன்று**
மங்களகரமான திறப்பு விழா
**டீனுஸ் ஹாட்வயர் ஸ்ரோர்ஸ்**

**18-11-83**
வெள்ளிக்கிழமை
காலை 6-14 முதல்
8-08 மணிவரை
வரும் சுபவேளையில்
**திரு. V. M. குமாரசாமி**
(இளைப்பாறிய நீதிபதி)
அவர்களால்
திறந்துவைக்கப்படும்.
இவ்விழாவில்
கலந்துகொண்டு
சிறப்பிக்கும்படி
அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.

**TEENAS HARDWARE STORES** (பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக)
110, K.K.S. வீதி, சுன்னுகம்,
உரிமையாளர்: தர்மலிங்கம்,
(9898) ஸ்ரீஹரன், அளவெட்டி.

# சைபிரஸ் விவகாரம் ஐ. நா.

## பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படும்!

நியுயோர்க், நவ 17

சைப்பிரஸ் வடபகுதி துருக்கிய ஆக்கிரமிப்பாளரால் தனிநாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச்சபையில் விவாதிக்கப்படவுள்ளது.

ஐ. நா.வுக்கான சைப்பிரஸ் பிரதிநிதிகள் நேற்று இரகசியமாககூட்டமொன்றைநிகழ்த்தி சைப்பிரஸ் வடபகுதிபற்றி ஐ. நாவில் விவாதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் துருக்கியரால் சைப்பிரஸ் வடபகுதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தனிநாட்டை அங்கீகரிக்கக் கூடாதெனவும், ஐ நா. அங்கத்துவ நாடுகளும் சைப்பிரஸ் வடபகுதிப் பிரகடனத்தை ஆட்சேபிக்க வேண்டுமென்றும் இப்பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இதே வேளை சைப்பிரஸ்தலைவர் திரு கிப்றியானோ நேற்று ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியுயோர்க் பயணமானார். திரு கிப்றியானோ நியுயோர்க் புறப்படுமுன்னர் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உட்பட உலகத் தலைவர்கள் பலருடன் தொடர்பு கொண்டு சைப்பிரஸின் தற்போதைய நிலைமையை விளக்கினார். வடக்கில் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள துருக்கிய ஆக்கிரமிப்பாளரின் பிரதேசத்தை அங்கீகரிக்க வேண்டாமென்று அவர் கேட்டுக் கொண்டார்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அணிசேரா இயக்கத் தலைவி என்ற முறையில் திரு கிப்றியானோவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினார். (கி)

## மதுரை விபத்தில் 5 பேர் பலி!

சென்னை, நவ. 17

மதுரை மாவட்டத்தில்நேற்று முன்தினம் நடந்த இரண்டுவீதி விபத்துக்களில் 5 பேர் இறந்துள்ளனர். 40 பேர் காயமடைந்துள்ளனர். கடும் காயமடைந்த 20 பேர் மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை செல்லம்பட்டியில் இடம்பெற்ற விபத்தில் 3 பேரும், மேலூரில் இடம்பெற்ற விபத்தில் 2 பேரும் மரணமானார்கள். இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதினால் இவ்விரு விபத்துக்களும் ஏற்பட்டன. (சூ)

## பாடசாலை வளர்ச்சிக்கு கல்விப் பணிப்பாளர் பாராட்டு

(கல்வியங்காடு)

''இப்பாடசாலை மிகவும் சிறந்த தரமான ஆரம்பபாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இப்பாடசாலைக்குப்போதிய காணி வசதி இல்லாமைபெருங் குறையாக இருப்பினும் இதன் வளர்ச்சிக்கு எம்மாலான சகல உதவிகளையும் செய்ய எப்போதும் ஆயத்தமாக இருக்கிறோம்.'' என நல்லூர் சென். பெனடிக்ற் றே. க. பாடசாலையின் பெற்றோர். ஆசிரிய தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ம சிமியாம்பிள்ளை கூறினார்.

இப்பாடசாலை அதிபர் சகோதரி ஸ்ரனிஸ்லஸ்மேரி தலைமையில்இடம்பெற் இவ்விழாவில்ற அவர் மேலும்பேசுகையில் இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மிகவும் சிறந்ததரமான பாடசாலைகளில் சேர்த்துக்கற்பிக்கவே விரும்புகிறார்கள். இப்பாடசாலையின் வளர்ச்சியை நான் அவதானித்து வந்துள்ளேன். எனவே இதன் வளர்ச்சிக்காக மேலும் உதவுவது எனது கடமை. நானும் ஆரம்பக் கல்வியைச் சகோதரிகளிடமே பெற்றேன். எனவே அவர்கள் தலைமையில் நடைபெறும் பாடசாலைகள் எவ்வாறு முன்னேற்றம் அடையும் என்பதனையும் அறிவேன் என்றார்.

இதனை அடுத்து யாழ். ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் கல்வி அதிகாரி திரு. ஏ. தியாகராசா பேசுகையில்; யாழ். மாவட்டத்தில் 169 ஆரம்ப பாடசாலைகள் இயங்குகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறந்த ஆரம்ப பாடசாலைகளில் இதுவும் ஒன்று. இங்கு கற்கும் பிள்ளைகளின் ஒழுக்கம், சுத்தம் என்பவற்றுடன் தரமுள்ள கல்வி புகட்டலும், போற்றக்கூடியவை என்றார்.

இவ்விழாவிற்கு ஆசனக் கோயில் பங்குக்குரு அருட்திரு ஜெபநேசன் அடிகள், நாவாந்துறை பங்குக்குரு அருட்திரு இம்மானுவேல் அடிகள், அப்போஸ்தலர்கார்மேல் சபைத் தாயார் மேபிள் உட்பட யாழ் மாவட்டப்பாடசாலைகளில்அதிபர்களாயுள்ள சகோதரிகள்பலரும் கலந்து கொண்டனர். இப்பாடசாலையின் அதிபர் சகோதரி தன்னுடன் ஒத்துழைக்கும் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் பாராட்டினார்: இறுதியில் இப்பாடசாலையின் அபிவிருத்திசபைச் செயலாளரும் பிரபல கலைஞருமான ஜெனம் பிரான்சீஸ் நன்றி கூறினார்.

## ★ இலங்கைத் தமிழர் விவகாரம்: இந்திய லோக சபையில் விவாதிக்க அனுமதி!

புதுடில்லி, நவ. 17

இந்தியலோகசபையில் இலங்கைத்தமிழர் பிரச்னைபற்றிய விவாதத்தை தொடர்ந்து நடத்துவதற்கு சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்கர் அனுமதிவழங்கினர்.

லோகசபை உறுப்பினர்களான திரு. மாயத்தேவர், திரு. சுப்பிரமணியசுவாமி ஆகியோர் கேட்டுக்கொண்டதற்ணேங்கவே இந்த அனுமதியை திரு. ஜாக்கர் வழங்கினர்.

இலங்கை விவகாரத்துக்கான இந்திய சிறப்புத்தூதுவர் திரு. கோபாலசுவாமி பார்த்தசாரதியின் இலங்கைத்தலைவர்களுடனான இறுதிச் சுற்றுப்பேச்சுக்கள் சிறந்த முறையில் அமைந்தன என்றும் லோகசபையில் தெரிவிக்கப்பட்டது அத்துடன் புதுடில்லியில் இடம்பெறவுள்ள இ. தமிழர்விடுதலைக்கூட்டணி தலைவர்களுடனான திரு. பார்த்தசாரதியின் பேச்சுக்களும் வெற்றியளிக்க வேண்டுமென விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சென்னையிலிருந்து இலங்கை த. வி. கூட்டணி உறுப்பினர்கள் நேற்று ரயில்மார்க்கமாக புதுடில்லி வந்துசேர்ந்தனர். (கி)

## மணிப்பூர் மாநிலத்தில் மூன்று தீவிரவாதிகள் கைது!

புதுடில்லி, நவ 17

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரைச்சேர்ந்த மூன்று தீவிரவாதிகளை பொலிஸார் நேற்று பலத்த சிரமத்தின் பின்னர் கைது செய்தனர்.

மணிப்பூரில் தீவிரவாதிகளின் மறைவிடமொன்றைத் தேடி மணிப்பூர் பொலிஸ் பிரிவொன்று நேற்றுச் சென்றது. அப்போது அவ்விடத்திலிருந்த தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் மிடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

பொலிஸார் மீது தீவிரவாதி ஒருவன் கைக் குண்டொன்றை வீசினன். இதனல் ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்

பொலிஸார் தீவிரவாதிகளுக்குக்கொடுத்தபதிலடியில் தீவிரவாதிகளில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டான். அத்துடன் பலர் காயமடைந்த நிலையில் தப்பியோடினர். இதைத்தொடர்ந்து பொலிஸார் தீவிரவாதிகளில் மூவரைக் கைதுசெய்தனர்.

மணிப்பூரைச் சேர்ந்த இத் தீவிரவாதிகள் மணிப்பூர் மாநிலம் கூடுதல் அதிகாரங்களைப் பெறவேண்டுமென வற்புறுத்தி வருகின்றனர். இதனல் இவர்கள் தமதுகோரிக்கைகளைநிறைவேற்ற தீவிரவாதச் செயல்களில் இறங்கி வருகின்றனர். (கி)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-30 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி
7.45 நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்]
8-15 செய்திகள் (சிங்களம்]
8-30 சந்திப்பு நிகழ்ச்சி [சிங்களம்]
9-00 ஆங்கிலத் திரைப்படம்
9-30 செய்திகள் [ஆங்கிலம்)
9-50 ஆங்கிலத் திரைப்படத் தொடர்ச்சி

## பனம் விதைகள் நாட்ட ஏற்பாடு

(சாவகச்சேரி)

பனம் விதைகளை நாட்டும் பணியினை மேலும் விஸ்தரிக்க கைதடி அகதிகள் முன்வந்துள்ளனர்.

கைதடி அகதிகள் முகாமின் ஞாபகமாக ஏற்கனவே கைதடிச் சந்தியில் இருந்து அரியாலைச் சந்திவரைக்கும் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

இவை தவிர செம்மணி வீதியிலும், கைதடி-கோப்பாய் வீதியிலும் பனம் விதைகளை நாட்டுவதற்கு முகாம் அகதிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என முகாம் நிர்வாகிகள் அறிவித்துள்ளார்கள். (க)

## காரைநகரில் மணிவாசகர் விழா

(பண்டத்தரிப்பு)

காரைநகர் ஈழத்து சிதம்பர சிவன் கோவிலில் எதிர்வரும் திருவாதிரை, திருவெம்பாவைக் காலத்தில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மணிவாசகர் விழாவை சிறப்பாக நடாத்துவது என்று காரைநகர் மணிவாசகர்சபை தீர்மானித்துள்ளது.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற காரைநகர் மணிவாசகர் சபையின் 43 வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சபைத் தலை

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாசகர் சபையின் சைவசமயப் பரீட்சை: 2000 பேர் தோற்றுவர்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் சைவ சமயப் பரீட்சை இம்மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை இப்பரீட்சைக்கு சுமார் இரண்டாயிரம் பேர் தோற்ற விருப்பதாக காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் திரு. செ. தேவதாசன் தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் சிறப்பாக சித்தியடையும் மாணவர்களுக்கு விலையுயர்ந்த தங்கப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் மார்கழி மாதத்தில் நடைபெறவுள்ள மணிவாசகர் விழாவில் இதற்கான பரிசளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளதாகவும், இதை ஊக்குவிப்பதற்கு காரைநகரிலுள்ள சைவப் பெரியார்களும், வர்த்தகப் பிரமுகர்களும் முன்வந்திருப்பதாகவும் திரு. தேவதாசன் தெரிவித்தார்.

## மட்டுவில் வடக்குப் பகுதியில் பட்டு நெசவுத்தொழில்

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட திட்ட அமுலாக்கல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் மட்டுவில் வடக்கு மாறுவளையில் தற்போது நெசவுத் தொழிலை பாரம்பரிய தொழிலாகக்கொண்ட நான்கு இளைஞர்கள் பட்டு நெசவில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் இதுவரை மிகவும் தரம்மிக்க 40 பட்டுவேட்டி சால்வைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் பட்டுஉடைகளுக்கு நிகராக இவை காணப்படுவதால் போதியளவு சந்தை வாய்ப்புக் கிடைத்துள்ளதாக சாவகச்சேரி அபிவிருத்தி உத்யோகத்தர் தெரிவித்துள்ளார். (சூ)

## "கொடிகாமம் சந்தையை மாவட்ட அபிவிருத்திசபை நிர்வகிக்கவேண்டும்''

(சாவகச்சேரி)

''மாவட்ட அபிவிருத்திச் சபையின் கச்சாய் உபஅலுவலகத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட கொடிகாமம் மக்கள் சந்தையை உடனடியாக தனியார் குத்தகைக்காரரிடம் இருந்து பொறுப்பு எடுத்து. மாவட்ட அபிவிருத்திச்சபையின் கச்சாய் உபஅலுவலகம் நிர்வகிக்கவேண்டும். இல்லையேல் தனியார் குத்தகைக் காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கொடிகாமம் மக்கள் சந்தையைப் பகிஷ்கரிப்போம் அல்லது புதியதோர் சந்தையை உருவாக்குவோம்''

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றினை கொடிகாமம் இளைஞர் ஒன்றிய நிர்வாகிகள் ஏகமனதாக எடுத்துள்ளனர்.

கொடிகாமம் இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் திரு. எஸ். பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தின் பிரதிகளை யாழ். அரசாங்க அதிபர், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

ஐக்கிய இராச்சியத்திலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த இயக்குனர்கள் கைதடி அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்து முகாமில் இருக்கின்றசிறுவர்களின் நலன்கள் பற்றி விசாரித்தறிந்தனர்

அத்துடன் சிறுவர்களுக்கான பாடசாலை விளையாட்டு உபகரணங்களையும் மருந்து வகைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். (க)

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறை அரசினர் மத்திய மருந்துச்சாலை மருந்துக்கலவையாளர் திரு. இ. வைரமுத்து தமது 40 வருட சேவையின்பின்பு இம்மாதம் 13ம் திகதி தொடக்கம் பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார். அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவராக நீண்டகாலம் பதவி வகித்து சேவையாற்றிய திரு. வைரமுத்து தமது பதவிக் காலத்தில் யாழ். அரசினர் வைத்தியசாலையிலும், சாவகச்சேரி, பளை, முல்லைத்தீவு ஆகிய வைத்தியசாலைகளிலும் பணியாற்றியுள்ளார்.

## மணிவாக்கு

ஆனமுதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாயேழ் பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

— ஔவையார்

# நமது நோக்கு

## கலக்கமற்ற இலங்கை வேந்தன்

வருடா வருடம் நடைபெறும் வாணவிளையாட்டு பாராளுமன்றத்தில் நிதியமைச்சர்சமர்ப்பிக்கும் 'பட்ஜட்' என்பது இன்று உறுதியாய்விட்டது. கோவில் மேளவாத்தியத்தில் என்ன அதிசயம்?

ஒரே உபயகாரர் தொடர்ந்து ஏழுவருடம் நடத்தும் விழாவென்றால் அதனை வேறெவரும் பொறுப்பேற்க முன்வரவில்லையென்பது ஒரு கருத்து; அல்லது விழா செப்பமாக நடைபெறுவதை எவரும் குழப்ப விரும்பவில்லையென்பது மற்றது.

வேறு கருத்துக்களிருப்பினும் இன்று நாட்டின் நிதி நிலைமையை நன்குணர்ந்த நிதி திட்டமிடல் அமைச்சர் றோனி டி மெல் கொடுத்த விளக்கத்தின் படி இந்தப் பாரிய பொறுப்பை ஏற்க இன்றைய ஆட்சியில் வேறெவரும் இல்லையென்பது வெளிப்படை.

இருபத்தொரு ரூபா உழைத்து ஐம்பத்தொரு ரூபாயை செலவு செய்ய வேண்டிய நிலையிலேயே இலங்கை குடும்பங்களின் நிலை இருக்கின்றதென்று நிதியமைச்சர் குறிப்பிட்டிருப்பதால் இவரே நிரந்தர நிதியமைச்சர் என்று ஆட்சி முடிவெடுக்கலாம்.

2300 (இரண்டாயிரத்து முந்நூறு) கோடி ரூபா துண்டுவிழும் தொகையாகக் காணப்பட்ட போதும் சாதாரண பொதுமக்கள் மீது இரக்கம் காட்டி எவ்வித பெரும் சுமையையும் ஏற்றாத அதிசயத்தை தாம் உண்டு பண்ணியதாக அமைச்சர் பெருமிதம் கொண்டிருக்கிறார். இலங்கை அரசவர்த்தமானி காலத்துக்குக்காலம் ஏற்படுத்தும் அதிர்ச்சிகளை மக்கள் அறிவார்கள்.

ஒன்பது மணி நிமிடம் தாமதித்து பாராளுமன்றம் வந்து திடீர் பரபரப்பு ஏற்படுத்தியபோதும், 10-வது நிமிடத்தில் நிதிஅமைச்சர் தமது பேருரையை நிகழ்த்தினாரென்றால் மக்கள் தம் கடமையில் சுறுசுறுப்புடன் குறையை நிறைவேற்ற வேண்டுமென்பது மறைமுகமான பாடம்.

நாடுபெருமளவிற்குகடன் பட்டிருந்த போதும் எத்தகைய கலக்கமுமின்றி அதனைத் தீர்க்கும் யோசனைகளில், 'அபிவிருத்தித் திட்டங்களுக்கு இனிமேல்வெளிநாட்டு உதவிகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாதென்று' விடுத்த எச்சரிக்கை மிக அவசியமானது. ஆறு வருடங்களுக்கு முன் விட்டிருக்க வேண்டிய எச்சரிக்கை இது.

இலங்கை வேந்தனாகிய இராவணன் கலக்கமுற்ற சந்தர்ப்பமொன்றில் அந்த நிலையை கடன்பட்டார் நெஞ்சத்துக்கு ஒப்பிடுகிறது இராமாயணம்.

அருமையான உவமை இது என்றாலும், இன்றைய இலங்கை வேந்தர்கள் (ஒவ்வொரு அமைச்சரும் தத்தம் துறையில் வேந்தரே) எள்ளளவிற்கும் அசையாதிருத்தலின் காரணம் என்ன? அறநனைந்தவராயிருக்கலாம்? அவ்வாறாயின் வருங்காலம் இன்னுங்கூடிய இருளடைந்திருக்குமன்றோ?

எத்துணைப் பெருஞ் செல்வராயினும் கடன்படத் தலைப்படுவோர் விரைவிலே தங்கள் செல்வமெல்லாம் இழந்து தரித்திரராவர். மனிதர் அனுபவிக்குந் துன்பங்கள் எல்லாவற்றிலும், கடனால் உண்டாகுந் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை.

தாயைக் கண்டது போல் இன்புற்று தனவந்தனைக் கண்டு அவனிடத்தே கடன் பட்டவர், வட்டிக்கு அவன் எதிர்ப்படும் போது பேயைக் கண்டது போல நடுங்குவர்.

இந்த நடுக்கம் நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்திருக்கிறது; இதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரு பெருந்தனிகனே நிதித் துறையின் பொறுப்பேற்க வேண்டுமென்ற கனவும் சில காலத்துக்கு முன் காணப்பட்டது. அது நனவாகமுன் தனிகனைப்பற்றியே எவ்வித தகவலுமில்லை.

எந்த ஒரு திட்டத்திலோ அல்லது செல்வந்தரின் செல்வாக்கிலோ முழு நம்பிக்கை கொண்டிராது நாட்டு மக்களின் உற்பத்தி உழைப்பிலும் அரச நிர்வாகத்தின் ஊழல் தவிர்ந்த சிக்கனத்தாலும் ஆட்சியாளர்களின் பரந்த அரசியல் ஞானத்தாலும் நாட்டைக் கட்டியெழுப்புவது அசாத்தியமல்ல. 'கெடுகிறேன் பந்தயம்பிடி' என்றால் அதற்கு வைத்தியமில்லை.

ஆட்சியாளரின் முரண்பட்ட அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் சமநிலைப்படுத்தப்படவேண்டும். ஒருவித கட்டுப்பாடும் மிக மிக அவசியம்.

பொருளாதாரத்துக்கு அச்சாணி தனிமனிதனின் பாதுகாப்பான வாழ்வு; சமூகங்களிடையே ஒற்றுமை; தொழிலாளியின் கஞ்சிக்குத் தீங்குவிளையாமை.

பெருந்தோட்டத் தொழிலின் எதிர்கால புனரமைப்பில் பெரிதும் நம்பிக்கை கொண்ட நிதி அமைச்சர் நாட்டின் செல்வத்துக்கு தம் வாழ்க்கையை ஈடுவைத்துவரும் தோட்டத் தொழிலாளர்களை எவ்வாறு பாதுகாப்பது, அவர்களின் நீண்டகாலத் துயரை எவ்வாறு துடைப்பது. நாட்டின் பழம்பெருஞ் சமூகமாகிய தமிழர்களின் துன்பங்களுக்கென்ன வழி - இவற்றையெல்லாம் பிரமாதமாகக் கருதி வற்புறுத்தாமை இன்றைய பட்ஜட்டின் பெருங்குறைகளாகும்.

உழைப்புக்கும் ஊதியத்துக்கும் அத்திபாரம் விரக்தியற்ற வாழ்வு. வாழ்வின் அநித்தியத்தை விளக்க, நேற்றிருந்தான் இன்றில்லை என்ற பெருமையை எடுத்துக்காட்ட, கத்தியும் துப்பாக்கியும், குண்டும் கொள்ளையும் அவசியமில்லை.

மண்ணுலக வாழ்வு மலர்வதாலேயே துறவின்மகிமை துலங்க முடியும்.

# ஆணவமலத்தை அழிக்கும் தீ போற்சவம்!

**வித்துவான் வ. மு. கனகசுந்தரம்**

இந்து சமயத்தவர்க்குரிய ஆலயங்களும் இல்லங்களும் இன்னொளியுடன் இலங்கும் நாள் ஆண்டுதோறும் நிகழும் கார்த்திகைத் தீபோற்சவத்திருநாளே.

குமாராலய தீபம், விஷ்ணுவாலய தீபம், சர்வாலயதீபம், என முப்பிரிவாக இத்திருநாள் கொண்டாடப்படுவதுண்டு. இம்முப்பிரிவும் ஒரேநாளிலும், இருநாட்களிலும் நிகழ்வதுண்டு.

கார்த்திகை நட்சத்திரத்துடன் சந்திரன் நிற்கும்காலம் திருக்கார்த்திகை எனப்படும். மாதந்தோறும் நிகழும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதம் அனுட்டிக்கும் ஆற்றல் அற்றவர்கள் இந்நாளிலேனும் உபவாசமிருந்து விரதமனுட்டித்து முருகப்பெருமானை முழு மனத்துடனும் வழிபடுவது வழக்கம்.

கார்த்திகை நட்சத்திரமும் பௌர்ணமித்திதியும் ஒரே நாளிலும்முன்பின்னாகஇருநாட்களிலும் நிகழ்வதுண்டு. கார்த்திகைநட்சத்திரத்தன்று குமாராலய தீபமும் விஷ்ணுவாலய தீபமும் பௌர்ணமித் திதியன்று சர்வாலய தீபமும் கொண்டாடப்படும். இவ்வாண்டு இவை மூன்றும் 20-11-1983 (ஞாயிறு) ஒரே நாளில் அமைகின்றன. ஆனால் மலையடுத்த இடங்களிலுள்ள ஆலயங்களில் நட்சத்திரமும் கடலடுத்த இடங்களில் உள்ள ஆலயங்களில் திதியும் முக்கியமெனக்கொள்வதுண்டு. இக்காரணம் பற்றியே திருவண்ணாமலையில் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று தீபோற்சவம் கொண்டாடப்பெறுவது வழக்கம்.

### குமராலய தீபம்

சூரபத்மன் என்னும் அசுரனின் அக்கிரம ஆட்சியை சகிக்கலாற்றாத தேவர்கள் யாவரும் ஒருங்கே சென்று பரமசிவனிடம் தங்கள் இடுக்கணை நீக்குமாறு வேண்டினர். அதற்கிணங்கிய பரமசிவன் தனது ஈசானம் தற்புருடம், அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐம்முகங்களோடு அதே முகமும் சேர்ந்ததாகிய ஆறுமுகவடிவங்கொண்டு அவற்றினின்றும் ஆறு அக்கினிப்பொறிகளை உண்டாக்கினார். அவை கங்கையால் சரவணப் பொய்கையில் சேர்க்கப்பட்டதும் அழகிய ஆறுகுழந்தைகளாகத் தோன்றின திருமால் முதலிய தேவர்கள் அங்கு தவஞ்செய்து கொண்டிருந்த கார்த்திகைப் பெண்களைப்பார்த்து அக்குழந்தைகளைப் பாலூட்டிப் பேணுமாறுகூற அவர்களும் அகமகிழ்வுடன் அவ்வாறே செய்வராயினர்.

இதன்பயனாக அப்பெண்கள் அறுவரும் கார்த்திகை நட்சத்திரம் என்னும் அறுமீனுக்கு அதிதேவதையாகும்சிறப்பை பெற்றனர். அவர்கள் வேண்டுதலுக்கிணங்க கார்த்திகை விரதத்தை அநுட்டித்து ஆறுமுகக்கடவுளைப் பூசிக்கும் அடியார்கட்கு அவர்கள் வேண்டிய சித்தி முத்திகளை அளித்து வருகின்றார். ஒளிவடிவாக உதித்த ஆறுமுகப்பெருமானை நினைந்து திருக்கார்த்திகையன்று தீபங்களேற்றி பூசை முதலியன செய்து மக்கள் வழிபடுவராயினர்.

### விஷ்ணுவாலயதீபம்

முன்னொரு காலத்தில் மாபலிச் சக்கரவர்த்தியென்னும் ஓர் அரசன் அநேகசெல்வமும் பலமும் நிறைந்தவனாய் அரசியற்றி வந்தான். தன்னிடம் யார் வந்து எதை யாசித்தாலும் இல்லையென்னாது வழங்கிவந்தான். இதனால் தருக்கித்தும் இருந்தான் விஷ்ணு இவனது ஆணவத்தை அடக்க வாமனவடிவங்கொண்டு சென்றுமூன்றடிமண் வேண்டினான். அவனும் அவ்வாறே கொடுக்க விஷ்ணுவும் வானுலகில் ஓரடியையும் பூவுலகில் ஓரடியையும் மூன்றாம் அடியை மாபலிச் சக்கரவர்த்தியின் தலையிலுமாக விஸ்வரூபம் கொண்டு வைத்து அவனை பாதலத்துள் அமிழ்த்தினார். அப்போது அவன் உண்மையை உணர்ந்து மக்கள் இச்சம்பவம் நடந்த திருக்கார்த்திகை அன்று விளக்குகள் இட்டுத் தன்னை நினைந்து கொண்டாட வேண்டும் எனவேண்ட விஷ்ணுவும் அவ்வாறே அருளினார்.

### சர்வாலய தீபம்

ஒரு காலத்தில் பிரம விஷ்ணுக்கள் தம்முள் ஒவ்வொருவரும் தாமே பெரியவர் எனக்கூறி வாதிட்டுப் போர் புரியலாயினர். அவர்களுக்கு உண்மையை உணர்த்தும் பொருட்டுச் சிவபெருமான் ஒளிப்பிழம்பாய்த் தோன்றி யார் பெரியவர் எனத்துணிய அப்பிழம்பின் அடி முடிகளை காணுமாறு கூறினார். அவர்களும அவ்வாறே முயன்றபொழுது அப்போராளி சொர்க்கதையும் கடந்துநின்றதை நினைவுறுத்து தற்கே சொர்க்கப்பனை கொழுத்துவது வழக்கம்.

ஆணவ மல மறைப்பால் மயங்கித் தாமே 'பிரமம்' எனக்கூறித் திரியும் அறிவிலிகளுக்கு அறிவுறுத்தும் பொருட்டே இத்தீபோற்சவம் ஆண்டுகள் தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## வெள்ளிச்சிந்தனை

### யாத்திரை

- அருளாளன் -

சகலகலாவல்லி மாலை பாடிய குமரகுருபரர் ஐந்து வயதிலேலே முருகன் அருள் பெற்றவர். முருகன் அருளால் தமிழ்ப் புலமையும் கவிபாடும் ஆற்றலும் அடைந்தவர். இவர் இளம் புலவராக விளங்கிய போது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தைப் பாடி அரங்கேற்றினார். அப்போது மீனாட்சியே இவருக்குத் தனது முத்துமாலையை அணிவித்தார் என்பர். இப்படியான பெருமைகளுக்குரிய குமரகுருபரர் ஞானாசாரியார் ஒருவரை அடைந்துதான் துறவியாதற்கு தீட்சை வழங்குமாறு வேண்டினார். இவரின் ஞானாசாரியராகிய மாசிலாமணி தேசிகர் குமரகுருபரரின் மனநிலையைப் பரீட்சிப்பதற்காகவும், அவரின் மனப்பக்குவத்தை வளர்ப்பதற்காகவும் காசியாத்திரை செய்து வருமாறு பணித்தார். இக் காலத்தைப் போல் பிரயாண வசதிகளற்ற அக்காலத்தில் தஞ்சை மாவட்டத்திலிருந்து காசிக்குப் போய்வர ஒரு வருடத்துக்கு மேலாகும். ஆனால் தான் விரைவாகத் துறவியாய்விட வேண்டும் என குமரகுருபரர் விரும்பினார். அதுகண்ட மாசிலாமணி தேசிகர் அவரைச் சிதம்பர யாத்திரை செய்யப் பணித்துப் பின்னர் துறவியாதற்கான தீட்சை செய்துவைத்தார் என்பனவற்றை குமரகுருபரர் வரலாற்றில் காணலாம்.

ஆத்மீக வளர்ச்சி அடைவதற்கு பெருவாய்ப்பான யாத்திரை உலகியல்அனுபவத்தைச் சுலபமாகப் பெற உதவும். பரந்த மனப்பான்மையையும் மனிதப் பண்பின் பெருமையையும் உணரச் செய்யும். சுயநலமாகிய குறுகிய மனப்பான்மையின் சிறுமையையும் யாத்திரை உணர்த்தும். ஆனால் பலர் இக்காலத்தில் யாத்திரைக்கும் உல்லாசப் பிரயாணத்துக்கும் வேற்றுமை தெரியாமலிருக்கின்றனர். உல்லாசப் பிரயாணமாவது உடலுக்கு இதமாகவும் மனத்துக்கு மகிழ்ச்சியாகவும் சுற்றுலாச் செய்வதேயாகும்.

உல்லாசப் பிரயாணத்தின் போது பல இடங்களில் உள்ள மக்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றால் விசேட அனுபவங்கள் உண்டாகா.

இக்காலத்தில் உலகியல்வாழ்வில் அபிமானம் வைத்திருக்கும் பலர் யாத்திரையின் பெருமையையும் அவசியத்தையும் அறியாதிருக்கின்றனர். பலர் உடலுக்குச் சுகம் செய்யும் செயல்களாலே திருப்திப்படுபவர்களாய் உயிருக்கு நலம்தரும் சிறந்த செயல்களைப் புறக்கணித்துவிடுகின்றனர். 'இந்தச் சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம்' என்னும் இலட்சியத்துடனும் உலக வாழ்வினைத் திருவருட்டுணையுடனே நடத்தவேண்டும் என்னும் நோக்குடன் வாழ்பவர்களான பலரும்கூட யாத்திரையில் அக்கறை கொள்வதாயில்லை.

துறவு வாழ்க்கையில் ஆர்வமற்றவரும் உலக வாழ்க்கையில் ஈடுபாடு மிக்கவர்களும்கூட தம்முயிர் நலன் கருதியும் திருவருள் விளக்கத்தை உணர்தற்காகவும் வருடமொருமுறை புனித யாத்திரையில் ஈடுபட வேண்டும். சிதம்பரம், காசி முதலிய புண்ணியத்தலங்களைக் குறித்து வாழ்வில் ஒருமுறையாவது யாத்திரை செய்யும் இலட்சியமும் முயற்சியும் உள்ளவராக சைவசமயிகள் இருப்பது அவசியம்.

யாத்திரையின் அவசியம் கருதியே வட இந்தியாவிலுள்ளோர் தென்னிந்தியக்கரையில் உள்ள இராமேஸ்வரத்தையும் தென்னிந்தியாவிலுள்ளோர் வட இந்தியாவில் கங்கைக் கரையில் விளங்கும் காசியையும் யாத்திரைக்குரிய புண்ணியத் தலமாகக் கொண்டு யாத்திரை செய்வர்.

''நாடும் நகரமும்
நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து
சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்
பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக்
கோயிலாக் கொள்வனே''

— திருமூலர் திருமந்திரம்


## மீசாலையில் அகண்டநாம பஜனை

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கில் கந்தசாமி கோவிலில் வரும் 20ம் திகதி சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கத்தினரால் 'அகண்ட நாம பஜனை' நடாத்தப்படவுள்ளது.

இப்பஜனை ஆத்ம ஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெறவுள்ளது.

# வயது 7, வளர்ச்சி தொடர்கிறது!




7, ஆண்டுகளுக்கு முன்னர், மகாராஜா முதலீட்டு நிறுவனத்தின் உதயம் ணிகரமான சாதனையொன்று, ஏனெனில் 77ம் ஆண்டுத் தேர்தலுக்குமுன் லங்கையில் நிலையற்ற பொருளாதார, அரசியல் நிலைப்பாடே நிலவியது.

நமக்குக் காலத்தின் மீது நம்பிக்கையிருந்தது, அந்நம்பிக்கை நன்மை தந்தி க்கிறது. ஏனெனில் நாமே சொல்லிக்கொண்டாலும், இன்றுவரையான நமது ளர்ச்சி அசாத்திய வியப்புக்குரியது. இக்குறுகிய 7 வருட காலத்துள் இந்நாட் ன் மிகப்பெரிய, ஸ்திரமான, நிதி நிறுவனங்களிலொன்றாக வளர்ந்திருக்கிறோம் ப்பிரல் 77 லிருந்து இன்றுவரையான எமது வளர்ச்சி 300 மடங்காகும், அதன் லனே 13.6 கோடி ரூபாய் வைப்புப்பணமாகும்)

காலத்தின்மீது நாம் கொண்ட நம்பிக்கை வீண்போகவில்லை! இன்றும் மகா ஜா முதலீட்டு நிறுவனம் முன்னரைப் போன்ற ஸ்திரப்பாட்டுடனேயே கழ்கிறது.

வெகு விரைவில், வைப்புச்சான்றிதழ்,வீடமைப்பு நிதியுதவி, சிறப்பான ர்த்தக வங்கிச்சேவை, பாரிய சொத்து அபிவிருத்தித் திட்டம் போன்ற புதிய லதிக திட்டங்களையும் அறிமுகம் செய்யவிருக்கிறோம்.

## ங்கள் பணத்தை விவேகமாகவும், விஸ்தீரமாகவும் பருகச் செய்கிறோம்.


எமது முதலீட்டாளர்களின் பணத்தை வெகு கவனமாக முதலீடு செய்கி றமென்ற நம்பிக்கையே நம் காரிய சித்திக்கான முக்கிய காரணங்களிலொன் கும்.

அபிவிருத்தித் திட்டத்திலிருந்து சுற்றுலாத்துறைவரை, இயந்திர இறக்குமதி லிருந்து போக்குவரத்துத்துறையீறாக, நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெரிதும், சிறிதுமான நூற்றுக் கணக்கான வியாபாரத்துறைகளில் நாம் முதலீடு செய்கிறோம்.

எனவே எமது முதலீட்டாளர்களின் பணம் வளர்ச்சிமிகு வர்த்தகத் துறை களிலேயே முதலீடு செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம், சுருங்கக் கூறின் உங்கள் பணம் ஓரிடத்தில் முடங்கியிருக்காது பல துறைகளில் முதலீடுசெய்யப்படுகிறது.

கடந்தகாலத்தைப் பெருமையோடு இன்று திரும்பிப்பார்க்கும் அதேவேளை வருங்காலத்திலும் தொடரும் வளர்ச்சி, வளமான சகாப்தத்தை உருவாக்கும் என்பதில், எதிர்காலமீதும் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

## உங்கள் வைப்புக்களை எவ்வாறு மீள முதலீடு செய்கிறோம்.




# மகாராஜா முதலீட்டு நிறுவனம்

கூட்டிணைக்கப்பட்டது 23.9.76. தலைமை அலுவலகம்: 347, யூனியன் பிளேஸ் கொழும்பு 2. தொலைபேசி 29747/34133/23130
பதிவு அலுவலகம்: 54, பாங்ஷால் வீதி கொழும்பு 11. கிளை அலுவலகம்: 122, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 021-24267

கிய வியாபாரத்துறைகள் :
நிலையான வைப்புக்கள் சேகரித்தல். தொழிற்சாலை பந்திரங்கள் மூலப்பொருட்கள் இறக்குமதிக்கும் அதுபோன்ற று துறைகளுக்கும் நிதிவழங்கல், குத்தகை கொடுத்தல், ர்த்தகவாகனங்களுக்கு நிதிவழங்கல், காப்புறுதி முகவர்.

ணிப்பாளர் சபை
ரு. ஆர். மகாராஜா முகாமைப் பணிப்பாளர்
ரு. ஆர். இராஜமகேந்திரன் முகாமைப் பணிப்பாளர்
ரு. வி. என். குமாரசுவாமி FCA (Eng & Wales) AT II (Eng) MInstAM (Eng) AMBIM (Eng) FCA (Cey)
ாநிதி. எம், ஏ. பெர்ணண்டோ PhD (Cantab)
ரு. பி. மகிந்தா BSc. (Hons) FBIM (Eng)
ரு. வி. சண்முகம் LLB (Lond) Hons AIB (Lond) Attorney at law
ரு. டபிள்யூ. றஞ்சித்சொய்சா FCA (Eng & Wales)
ரு. டபிள்யூ. பலநாயக்கா MBIM (Eng) இயங்கும் பணிப்பாளர்
ரு. சீ. சிறி நம்முனி MBIM (Eng)

வட்டி வீதங்கள் : (வருடாந்தம்)*

| காலம் | ரூ 500 முதல் 99,999 வரையான வைப்புக்கள் | | ரூ 100,000 க்குமேல் வைப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் |
| 3 மாதம் | | 16% | - | 17% |
| 6 மாதம் | - | 17% | - | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | - | 26% | - | 27% |
| 36 மாதம் | - | 27% | - | 28% |

* வட்டி வீதங்கள் மாற்றத்திற்குரியன வைப்புக் காலத்தில் நடைமுறையில் இருக்கும் வட்டி வீதமே வழங்கப்படும்.

சுருக்கப் பேறுகள் :

| | 1979/80 | 1980/81 | 1981/82 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| பங்கு மூல தனம் | 250 000 | 750 000 | 1 585 900 |
| ஒதுக்கம் | 1 893 642 | 2 835 255 | 11 175 062 |
| மொத்த பங்குதாரர் நிதி | 2 143 642 | 3 585 255 | 12 760 962 |
| வைப்புக்கள் * | 42 139 162 | 66 938 481 | 78 102 511 |
| வங்கி இருப்பு | 6 423 791 | 8 973 105 | 12 812 856 |
| பொறுப்புக்கள் | 1 811 350 | 5 139 382 | 1 513 556 |
| வைப்பாளருக்கு வட்டி - வழங்குமுன் இலாபம். | 6 729 199 | 13 779 850 | 18 691 833 |
| வரியிறுக்கு முன் இலாபம். | 2 135 874 | 1 946 188 | 2 454 490 |
| வரிறுயித்தபின் இலாபம் | 1 635 873 | 1 629 687 | 1 084 490 |
| பங்குலாபம் | — | 187 500 | — |

* 1983 செப்டெம்பர் 30ம் திகதிப்படி வைப்புக்கள் 13 கோடி ரூபாய்களுக்குமேல்

HTL MI 1348

# புலோலி உப அலுவலக எல்லேக்குள் 76 ஆயிரம் நிலுவை!

(புலோலி)

யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக நிர்வாக எல்லேக்குள் இதுவரை 76,436 ரூ. 90 சதம் ஆதன வரிப் பணம் அறவிடப்படாமல் நிலுவையாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வரிப் பணத்தினை உடன் செலுத்துமாறு யாழ். அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். அருளானந்தம் வரியிறுப்பாளர்களேக் கேட்டுள்ளார்.

இவ்வரிப்பணத்தின் மூலமே இப்பகுதி கிராமங்களின் அபிவிருத்திகளே மேற்கொள்ளமுடியும். இலவசசித்த ஆயுர்வேத வைத்தியசாலே, பொதுசன நூலகம், மலகூட கூட்டுச் சேவைகள் என்பனவற்றைக் கூடச் சீராகச் செய்வதற்கு தற்போது இவ் உப அலுவலகத்திற்குப் போதிய வருமானம் இல்லாமல் இருக்கின்றது. இந்நிலேயில் வீதி மின்விளக்குகளேக்கூட ஏற்ற முடியாமல் போய்விடும். எனவே வரியிறுப்பாளர்கள் நிலுவையாகஉள்ள வரிப் பணத்தைக் காலம் தாழ்த்தாது செலுத்தி இப்பகுதிகளின் அபிவிருத்திக்கு உதவுமாறும் திரு. அருளானந்தம் வரியிறுப்பாளர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# காணியற்றவர்களுக்கு அரச காணி பகிர்ந்தளிக்கப்படும்!

## மன்னர் கிராமோதயசபை தீர்மானம்

(மன்னர்)

''மன்னர் - தலேமன்னர் வீதியில் இரண்டாம் கட்டையிலுள்ள அரசாங்கக் காணிகளே மன்னர் மேற்கு கிராமோதய சபை விலேக்குவாங்கி மன்னர் பகுதியிலுள்ள காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்.

இவ்வாறு கடந்த மன்னர் கிராமோதயசபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் மன்னர் மேற்கு கிராமோதயசபைத் தலேவர் திரு. எம். சர்க்கரியாஸ் தலேமையில் மன்னர் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு.

''முன்னுள் எம். பி. யான அமரர் அழககோன் நினைவு தின விளேயாட்டுப்போட்டி பிரதிவருடமும் மன்னர் விளேயாட்டரங்கில் நடத்தப்படும் இவ்விளேயாட்டுப் போட்டியின் போது உதைபந்தாட்டம், கிளித்தட்டு போன்ற விளேயாட்டுக்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

''வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு கால்நடைவைத்தியரின் உதவியுடன் நோய் தடுப்பூசிகள் போடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மன்னர் மேற்குகிராமோதய சபையினுல் கடல் அட்டைகள் சேகரிக்கும் தொழிலே ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளுதல். சாவற்காடு பகுதியில் சுண்ணும்பு உற்பத்தி தொழிற்சாலே ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளுதல். பனங்கட்டிகொட்டு பகுதியிலுள்ள ஒரு வீதியை புனரமைத்தல்.

''மன்னர் மாட்ட இணைப் பதிகாரியின் உதவியுடன் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களே கடற்கரையிலேயே பாதுகாத்து வைக்கும்பொருட்டு கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

''மன்னர் பகுதியைச்சேர்ந்த க. பொ. த. சாதாரண வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களுக்கு மீட்டல் வகுப்பு ஒன்று ஆரம்பித்தல்.

''மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலேயிலிருந்து கடும் நோயாளர்களே அனுராதபுரம் அரசினர் வைத்திய சாலேக்கு மாற்றப்படுவதை நிறுத்தி யாழ். அரசினர் ஆதார வைத்தியசாலேக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரப்படும். மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலேயின் வெளிநோயாளர் பகுதியில் இரு நீர்த்தொட்டிகளே அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தலேமன்னர் - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சரிடம் கோரப்படும்''

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.


# I. C. M. A.

NEXT SESSION COMMENCES
AS FOLLOWS :—

## 1984 MAY — JUNE

பரீட்சைக்கான வகுப்புகள்

## ஆரம்பமாகும் திகதிகள்

| | |
|---|---|
| I C M A—SECTION A—STREAM I | 3-12-83 |
| STREAM II | 3-12-83 |
| I C M A—SECTION B | 3-12-83 |
| I C M A—PROFESSIONAL PART I | 10-12-83 |
| CHARTERED PRELIMINARY | 3-12-83 |
| I A A—PART I | 3-12-83 |
| I A A—PART II | 17-12-83 |
| I A B—FOUNDATION | 7-12-83 |
| INTERMEDIATE | 14-12-83 |
| FINAL | 17-12-83 |
| I D P M—PART I | 12-12-83 |
| I D P M—PART II | 14-12-83 |
| A A T—LEVEL I | 3-12-83 |
| A A T—LEVEL II | 17-12-83 |

விரிவுரையாளர்கள்: Mrs S. சுந்தரலிங்கம், M. நல்லநாதன், யூஜீன் மரியாம்பிள்ளே, P. சிவபாதசுந்தரன் மற்றும் பல பிரபலமானவர்கள்.

இலங்கையில், கணக்கியல்துறையில் மிகக் கூடுதலான மாணவர்களேக் கொண்ட ஸ்தாபனம் OXONIA INSTITUTE, அதே போன்று வடமாகாணத்தில் மிக அதிகமான மாணவர்களேக் கொண்டதும் 78ம் ஆண்டு முதல் ஸ்திரமாகத் தொடர்ந்து நடைபெற்று பல மாணவர்களேச் சித்தியெய்தச்செய்த ஒரே ஸ்தாபனம் CANTABIA INSTITUTE.

- ஆரம்ப மாணவர்களுக்கேற்ற பயிற்சி.
- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
- இலவச அச்சடித்த விஞத்தாள்களும் விடைகளும்.

# CANTABIA INSTITUTE

21, MAIN STREET,
JAFFNA.
Phone: 24201


# தீவுப்பகுதி வீதிகள் பெரிதும் பாதிப்பு

(வண்ணர்பண்ணே)

கடந்தசில தினங்களாக வட பகுதியில் கடல் பெருக்கெடுத்துள்ளதால் தீவுப்பகுதியில் பல வீதிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இக்கடல் பெருக்கெடுப்பினுல் பரவலான பாதிப்பு விவசாய நிலங்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக ஏற்பட்டுவரும் இக்கடல் பெருக்கெடுப்பினுல் மண்டைதீவு அல்லேப்பிட்டி பரவைக்கடல் இணைப்பு வீதி துண்டிக்கப்பட்டுள்ளது இவ்வீதியை மேவி வெள்ளம்பாய்ந்து செல்வதால் நீர் அரிப்பினுல் இவ்வீதியின் பெரும்பகுதி துண்டாடப்பட்டுள்ளது. இதனுல் இவ்வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

மண்டைதீவு யாழ்ப்பாணம் பிரதான வீதியின் சில பகுதிகளின் மேலால் வெள்ளம் பாய்ந்து செல்வதால் இவ்வீதியின் சிலபகுதிகள் சேதமடைந்துள்ளன. இப்பிரதான வீதியில் உள்ள ஏழு கண் பாலம் மேற்குப்பக்கமாக சரிந்தநிலேயில் காணப்படுகிறது.

இப்பிரதான வீதியின் மேலால் பாய்ந்துகொண்டிருக்கும் வெள்ளத்தினூடாகவே வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன. கடந்த வெள்ளப்பெருக்குக் காலங்களில் நீர்பாய்ந்து செல்லாதிருந்த இடங்கள் இப்பெருக்கினுல் வெள்ளக்காடாக காட்சிகொடுக்கின்றன.

(வண். நிரு.)

# மாவையில் இன்று நடக்கும் கலேவிழா

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் நவீன ஈஸ்வரி சிறுவர் பாடசாலேப் பரிசளிப்பு விழாவும் கலேவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு ம. சிவராஜா தலேமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சிமியாம்பிள்ளே பரிசில்களே வழங்குவார்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு பி சிவஞானசுந்தரம் ஆசியுரை வழங்குவார். (அ)

# "கௌரவமானதொழில்தான் ஆனுல் ஊதியம் போதாது"

## ஆசிரியர் பற்றிக் கல்வி அதிகாரி

(சாவகச்சேரி)

''ஆசிரியர்களின் சம்பளம் இன்றைய வாழ்க்கைச்செலவுக்குப் போதுமானதல்ல. அரச அலுவலர்களில்ஒப்பீட்டு அடிப்படையில்பார்த்தால் குறைந்த ஊதியமுள்ளவர்கள் ஆசிரியர்களாவார்கள். ஆசிரியர்களின் தொழில் மிகவும் கௌரவமானது ஆனுல் தொழிலுக்கேற்ற ஊதியமில்லே என்ருல் தொழிலின் கௌரவத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்?''

இவ்வாறு பரந்தன் வட்டாரக் கல்வி அதிககரி திரு அ. தங்கராசா பளே மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் ''பரந்தன் கிளிநொச்சிக் கல்வி வட்டாரங்களின் கல்வி நிலே எப்படி ஆகுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. ஆசிரியர் பற்ருக்குறை ஒருபுறம், மறுபுறத்தில் தினசரி ரயில்பிரயாணம் இல்லாததால் ஆசிரியர்களின் வரவு குறைந்திருத்தலாகும். அத்துடன் இப்பகுதிகளில்கல்வி புகட்டுகின்ற ஆசிரியர்கள் பல்வேறுவிதமான பிரச்னேகளுக்கு மத்தியில் சேவையாற்ற வேண்டியுள்ளமை மிகவும் கவலேக்கிடமாகும்.

''இதனேக் கருத்தில் கொண்டு பரந்தன், கிளிநொச்சிக் கல்வி வட்டாரத்தின் கல்வித்தரத்தினே முன்னேற்ற நாம்எல்லோ முன்வரல் வேண்டும்'' என வேண்டிக் கொண்டார்.

அதிபர் திரு க.செல்லத்துரை நன்றியுரை தெரிவித்துப் பேசினுர். (அ)


# பிரத்தியேக வகுப்புகள்

பௌதிகம்:— திரு. N. பத்மநாதன்

இரசாயனம்:— திரு. K. M. இராமநாதன்

## புதிய வார இறுதி வகுப்பு

ஆரம்பம்: 19-11-83 சனி காலே 10-00 மணி

பௌதிக, இரசாயன பிரத்தியேக வகுப்புகள் இவ் ஆசிரியர்களால் இங்கு மட்டும் நடாத்தப்படும்.

15 2/4, மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## காரைநகரில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு.செ.தேவதாசன் தலேமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மணிவாசகர் விழாவின்போது ''திருவாதிரை மலர்'' என்னும் நூல் ஒன்றையும் வெளியிடுவது என்றும், விழாவில் பங்குபற்ற சைவசமய அறிஞர்களே அழைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மணிவாசகர் சபையின் புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலேவர்: செ. தேவதாசன் இணேச்செயலாளர்கள்:- பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளே, ந. பூங்குன்றன், பொருளாளர்; த. அம்பிகைபாலன், துணேப்பொருளாளர்: ம அழகேந்திரன் பரீட்சை செயலாளர்; சி. பொன்னம்பலம் 21 பேரை கொண்டநிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வலிதென் மேற்கில் 5ம், 6ம், கட்ட உணவுப் பொருட்கள் வழங்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் ஜுலை மாத கலவரங்களினால் இடம் பெயர்ந்து வந்துள்ள சுய தொழில் செய்தவர்களுக்கான 5வது, 6வது கட்ட இலவச உணவுப்பொருட்கள் இவ்வார இறுதியில் வழங்குவதற்கு உதவி அரசாங்கஅதிபர் திரு. அ. மகாதேவா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வெளியிடங்களில் சுய தொழில் செய்து அகதிகளாக இங்கு வந்துள்ளவர்கள் தமது பகுதி கிராமசேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு இந்த இலவசஉணவுப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று திரு. மகாதேவா இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (சூ)

## ஆரோக்கிய வாழ்வுக்கு "சுற்றுடல் சுத்தமாக இருத்தல் வேண்டும்"

(சாவகச்சேரி)

''மக்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு சுற்றுடல் மிகவும் சுத்தமாக இருத்தல் மிகவும் அவசியமானதாகும். நாம் சுத்தமுள்ளவர்களாக இருப்பின் தொற்று நோய்கள் எம்மை இலகுவில் அணுகாது. சிரமதானப் பணிகள் மூலம் கிராமகங்களில் இருக்கின்ற பொது இடங்களை நாம் துப்பரவு செய்து கொள்ளவேண்டியது எமது தலையாய கடமைகளில் ஒன்றாகும்''.

இவ்வாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உபதலைவரும் ஆயுள்வேத வைத்தியருமான பே. பிலிப்ஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி லியோ கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானப் பணியினை ஆரம்பித்து வைத்தபோது உரையாற்றினார்.

லியோ கழகத்தலைவர் செல்வன் செல்லையா செந்தில்லாதன் தலைமையில் சுமார் [illegible]0 இளைஞர்கள் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்

## பண்டித பரீட்சைகளை நடத்த தீர்மானம்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பண்டித பரீட்சைகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் யாழ். கல்வி அதிபதியும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. ம. கிமியாம்பிள்ளை தலைமையில் கூடிய நிர்வாகசபை முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாடசாலைகள் விடுமுறை விடும் காலத்தில் பாலபண்டிதர், பண்டிதர் பிரவேசப் பரீட்சைகளை நடத்துவதென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் நலன்கருதி இலக்கண, இலக்கிய வகுப்புகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தவும் முடிவாகியுள்ளது. வகுப்புகளை மேற்படி சங்க நிர்வாகிகளில் ஒருவரான வித்துவான் சி ஆறுமுகம் அவர்கள் பொறுப்பேற்று நடத்தவுள்ளார்.

இச்சங்கம் க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்காக நடத்திவரும் தமிழ் மொழிப் பரீட்சையை இம்மாதம் 25ம் திகதி முதல் நாட்டின் சகல பாகங்களிலும் நடத்தவுள்ளது.

## மாணவர் லயன்ஸ் மரம்நாட்டுவிழா

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தினர் மரம்நாட்டு வைபவத்தை மூன்று தினங்களாக சிறப்பாக நடத்தினார்கள்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஆர். மனோகரன் தலைமையில் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து மூன்றுதினங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில், வீமன்காமம் மகாவித்தியாலயம் தலையீட்டி ஞான வைரவர்ஆலயம், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, கீரிமலை சிவன் கோவில் உட்பட மற்றும்பல இடங்களில் மரம் நாட்டினார்கள். இவ்வைபவங்களில் காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டர் முகாமையாளர் அந்தோனிப்பிள்ளை, வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் மு. சிவராசா, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை டாக்டர் பத்மநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## புலவருக்கு பாராட்டு

(புங்குடுதீவு)

மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழைக்கருப் பஞ் சாறுக்கி அழகு தமிழாலும் பழகுதமிழாலும் அடியார்களுக்கு இருபதுநாட்கள் தொடர்விரிவுரை நிகழ்த்திய புலவர் சிவானந்தன் நாவலரின் பிரசங்க பாரம்பரியத்தின் வழித்தோன்றலாவார். எழுதுவது போலவும் பேசுவதுபோலவும் வாழ்ந்துகாட்டும் இவருடைய வாழ்க்கைநெறி பண்பட்ட சிவநெறியாகும்.

மேற்கண்டவாறு புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி சிவன்கோவிலில் கடந்த இருபதுநாட்களாக நடந்த கேதாரகௌரி இலட்சார்ச்சனை தினங்களில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் குறித்து தொடர்விரிவுரைகள் நிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தனுக்கு மேற்படி ஆலயத்தில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் உரைநிகழ்த்திய வித்துவான் பொன் அ. கனகசபை மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் தலைமையில் நடந்த இப்பாராட்டுவிழாவில்வித்துவான் கனகசபை தொடர்ந்து பேசியதாவது: புலவர் சிவானந்தனின் தந்தையாராகிய வைத்தியர் கணபதிப்பிள்ளை சைவ சித்தாந்தப் பேரறிஞர் சிவபூஜாதுரந்தரர் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத்தால் ''சித்தாந்தரத்தினாகரம்'' என்னும் பட்டத்தைப்பெற்று இந்பொழுது பரிபூரண நிலையாகி சமாதியாய் உள்ளார். அவருடைய சித்தாந்த மாணவர்கள் பல இடங்களில் சித்தாந்த செந்நெறியைப் பரப்புகிறார்கள். இத்தகைய பெரியாரின் மகனாகிய புலவர் சிவானந்தன் இந்தியாவிலும் இலங்கையிலும் சைவத்தமிழ் மேடைகளில் தனது சொற்பொழிவுத்திறத்தால் தமிழர் கலாச்சாரவளர்ச்சிக்கு பெரிதும் உழைத்துவருகிறார்.

தலைமையுரை நிகழ்த்திய ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் பேசும்போது கூறியதாவது சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே ஈழத்துச் சொற்பொழிவுகள் என்னும் புலவர் சிவானந்தனின் நூல் வெளியாகி நமக்கு பெருமையைத் தந்தது என்றும் கூறினார்.

## இன்றைய பலன்

கார்த்திகை 2-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(18-11-88)

மேடம்: மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிப்படையலாம், அபாயகரமான காரியங்களைத் தவிர்க்கவும்.

இடபம்; சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்தவும், குடும்பத்தில் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

மிதுனம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும், சகோதர வழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு.

கடகம்; திடீர் திருப்பம் உங்களை நல்ல நிலைக்கு கொண்டு வரும், ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவைகள் இலகுவில் முடிவடையும், இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்குபுகழ்உண்டு

சிங்கம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலை தூக்கும், சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண முடியும், உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை துள்ளும்.

கன்னி: கருடப்பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அன்னிய சகவாசம் ஆபத்தைத் தேடித் தரும்.

துலாம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல் கலைக்கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உற்சாகப்படுத்தும், கண்ணியம் சேரும்.

விருச்சிகம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டும்.

தனு: செய்தொழிலால் சிறப்படைவதற்கும் இடமுண்டு, புதிய கண்டுபிடிப்புக்களும் இடம்பெறும், பொறியியல்யாளர்களுக்கு சிறப்பான தினம், அரசினர் விருந்தும் உண்டு.

மகரம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராள குணத்தின்மூலம் தனமும் சேரும், புண்ணிய யாத்திரை உண்டு.

கும்பம்: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவர், இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும், புத்திர சுகத்துடன் தொழிலல் லாபம் கிடைக்கும்.

(8ம் பக்கம் பார்க்க)

## ஆடுவளர்ப்புக்கு ஊக்குவிப்பு

(சாவகச்சேரி)

ஆடுவளர்ப்புத் திட்டத்தினை கிராமிய மட்டத்தில் மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு திட்ட அமுலாக்கல் அமைச்சின் பெண்கள் பணியகம், தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட 22 யுவதிகளுக்கு ஆடுகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இத்திட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள திட்ட அமுலாக்கல் அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரன் இதனை மேற்பார்வைசெய்து வருகின்றார். (சூ)


வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154



விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவாலப்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள்

"பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

"சேர்கோப்பூர்"

450 மி. லீ.—55 ரூபா 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) "ஹெடோனல் எம். 40%"
450 மி. லீ.— 35 ரூபா

(3) "ஹெடோனல் D. 55%"
250 மி. லீ.—55 ரூபா.

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.

தொலைபேசி : 93563.

## சங்கானை கொலை முயற்சி வழக்கு:

# 6 சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

கொலை முயற்சிக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி நான்கு மாதங்களாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ஆறு சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிபதியால் தலா 1,500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சங்கானை அம்பிகாவத்தை வீதியைச் சேர்ந்த சின்னப்பு கணேசன் என்பவருக்குக் கல்லால் எறிந்து காயம் விளைவித்தது, அவரது மனைவி புனிதவதியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்தது, கந்தசாமி மூத்துராஜா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் கொலைசெய்ய எத்தனித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த பொன்னன் செல்லையா, வைரமுத்து பாலசுப்பிரமணியம், வைரமுத்து சற்குணசிங்கம், செல்லையா ஜெயபாலன், சிதம்பரம் செல்வரத்தினம், மாசிலாமணி சந்திரன் ஆகிய 6 சந்தேகநபர்கள் கைதாகி றிமாண்டில்வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இவர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

நீதிபதி திரு. வி.ஜெகசோதி இவர்களை தலா 1500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

அத்துடன் இவர்கள் மீதான குற்றப்பத்திரத்தையும் காங்கேசன்துறைப் பொலிசார் தாக்கல் செய்தனர்.

மேற்படி நபர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதால் நீதிபதி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைக் கோருமாறு பணித்து விசாரணையை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

6 சந்தேக நபர்கள் சார்பிலும் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் தரப்பில் சார்ஜன்ட் வி. தியாகராஜா வழக்கை நடத்தினர்.

## அகதி முகாம்களில் மலேரியா தடுப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களினல் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி, மன்னர், வவனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய அகதிகள் முகாம்களில் தங்கியிருப்போருக்கு கொடிய மலேரியா நோய் பரவி வருவதினல் இப்பகுதி மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தர்கள் கிருமிநாசினி தெளித்தல், சிகிச்சை அளித்தல் போன்ற சேவைகளை முகாம்களில் ஆற்றி வருகின்றார்கள்.

வவனியாவில் நிறுவப்பட்டிருக்கும் பிரதேச பூச்சியியல் ஆய்வுகூடக் குழுவினர் கடந்த ஒருமாத காலமாக வடபகுதியிலுள்ள சகல முகாம்களுக்கும் தொடர்ந்து விஜயம் செய்து பரிசோதனைகள் மேற்கொண்டு மலேரியாநோய் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்கள். அத்துடன் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்களை உண்டாக்கும் ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கொண்ட அறிக்கைகள் நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதேச பூச்சியியல்சிரேஷ்ட உதவி ஆய்வாளர் திரு. து: சண்முகராசா தலைமையிலான குழுவினரே இந்நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (சூ)

## கிராமங்களிலும் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கவேணடும்

(மாவிட்டபுரம்)

"நகரப்புற பாடசாலைகளில் விளையாட்டுத்துறைக்கு முக்கிய இடம் அளிக்கப்படுவதால் கிராமப்புறங்களிலிருந்து மாணவர்கள் நகரப்புறங்களுக்கு செல்லும் நிலையை காண்கிறோம். நகர்ப்புறபாடசாலைகளின் விளையாட்டுத் துறையினல்கவரப்பட்டே இம்மாணவர்கள் அங்கு செல்கிறார்கள். இந்நிலையில் கிராமப் பாடசாலைகளிலும் விளையாட்டுத் துறையை நன்கு வளர்ப்பதற்கு ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் சேர். பொன். இராமநாதன் விளையாட்டரங்கை திறந்து வைத்த வைபவத்தில் கலந்து அரங்கின் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்துப் பேசிய விளையாட்டுத்துறை துறை உத்தியோகத்தர் திரு. வி. கணேசலிங்கம் கூறினர்.

நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி விளையாட்டு மைதானத்தை வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ரி. செபநாயகம், கல்லூரி அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் ஆகியோர் மங்களவிளக்கேற்றித் திறந்து வைத்தனர்.

கல்லூரி அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் தலைமையுரை நிகழ்த்தினர்.

மற்றும் வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம், பிரதேச சபைத் தலைவர் திரு. செ. இலகுநாதன், திரு. ஆர். என். சிவப்பிரகாசம், அபிவிருத்திச் சபைச் செயலாளர் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளை ஆகியோரும் பேசினர். (சூ)

## புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

கட்டுடை சனசமூக நிலைய 28வது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. நா. இராசரத்தினம்தலைமையில்நடைபெற்றபோது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. நா. இராசரத்தினம், உபதலைவர் திரு. எஸ். மகாலிங்கம், செயலாளர் திரு நா. இரத்தினசிங்கம், பொருளாளர் திரு. க. உதயகுமார். 7 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (சூ)

## மது பலிகொண்டது

(கிளிநொச்சி)

பணக்கஷ்டத்தால் அவதிப்பட்ட விவசாயி ஒருவர் மதுவுக்கு அடிமையானர். மதுவெறி தலைக்கேறியதும் மனைவிக்கும் குடும்பத்தாருக்கும் தொல்லைகொடுத்தார். தகராறு தோன்றவே மதுவுடன் கிருமிநாசினியையும் அருந்தி மரணமடைந்துள்ளார்.

கண்டாவளையைச்சேர்ந்த சுவாமிநாதன் கணபதிப்பிள்ளை (42 வயது) என்பவரே மரணவானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் எம். கணேசதுரை ஆஜர்செய்தார்.

மரணமானவரின் மனைவி க. சந்திரமதியும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்புவழங்கினர். (ப)

## மரணத்தில் சந்தேகம்

(கிளிநொச்சி)

50 வயது நபர் ஒருவரின் மரணத்தில் அயலவர்கள் சந்தேகங்கொண்டதைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி பகிரங்கத் தீர்ப்பு வழங்கினர்.

முருகண்டி இந்துபுரத்தில் வசித்துவந்த பி. செல்லையா என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் ஜே. பி. மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிஸ் கான்ஸ்டபிள் எம். கணேதுரை ஆஜர்செய்தார்.

அயலவர்கள் இம்மரணத்தில் சந்தேகம்கொண்டதை மரணவிசாரணையில் அளிக்கப்பட்டசாட்சியங்களில் தெரிந்துகொண்ட மரணவிசாரனை அதிகாரி யோகலிங்கம் பகிரங்கத் தீர்ப்பு வழங்கி பொலிசாரைத் தொடர்ந்து புலன்விசாரணை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

## இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்; குருக்கு வழித்தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தும். ஏதேச்சதிகாரப் போக்கால் பிறரைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


நவீன உல்லாச குடிசைகள்
எல்லாம் உங்களுக்காகவே

நீலக்கடல் ஓரத்திலே டாம்பீகமுறையில் உங்கள் உள்ளத்திற்கு உவகை தரும் வகையில் உருவாக்கப்பட்ட புதுமையான அனுபவத்தையும் தருவது ஹாபர் வியூ ஹோட்டலேயாகும்.

- 60 ROOMS BUILT CHALET STYLE WITH A/C OR FANS WITH ALL MODERN AMENITIES.
  60 அறைகள் உப்பரிகை விதமாக கட்டப்பட்டவை குளிரூட்டப்பட்ட அல்லது மின்விசிறிகள் பொருத்தப்பட்ட எல்லாவித வசதிகளுடன் நிறைந்ததாய் அமையப்பெற்றது.
- VAST BANQUET HALL FOR WEDDINGS RECEPTIONS AND OTHER FUNCTIONS.
  கலியாணம், விருந்துபசாரம் அல்லது பொதுக்கூடல் நிகழ்ச்சியினைக் கொண்டாட வசதியாய் அமைந்த களியாட்டு மண்டபமுண்டு.
- THE MAIN RESTAURANT SERVES SOME OF THE FINEST FOOD YOU'VE EVER TASTED.
  பிரதான சிற்றுண்டிச் சாலையில் எப்பொழுதும் பெற்றிராத இன்சுவைப் பதார்த்தங்களை பரிமாறிக்கொள்ளலாம்.
- TWO WELL STOCKED BARS WITH YOUR FAVOURITE DRINKS.
  நீங்கள் நன்றே நயக்கும் நல்லினப் பானங்களை என்றும் குறையாது வழங்கும் இரு மதுபான சாலைகளுண்டு.
- EVERY SATURDAY NIGHT DISCOTHEQUE—NO COVER CHARGE.
  ஒவ்வொரு சனிக்கிழமையும் "டிஸ்கோ" நடனவிருந்து - பிரவேசம் இலவசம்.
- SOON BOAT RIDES FROM PRIVATE HOTEL PIER.
  மிகு விரைவில் எமது ஹோட்டலின் பிரத்தியேக இறங்குதுறையிலிருந்து படகுச் சவாரிகள்.

A/c Room - Rs. 250/- per Double
FOR SRI LANKANS AND FOREIGN RESIDENTS IN SRI LANKA
RESERVATIONS—

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

Telegrams: ANCHOR Kankesanturai. Telephone; 22605 Jaffna.
Another Hotel Managed By: AITKEN SPENCE AND CO., LTD.
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha,
COLOMBO - 1. Tel: 27861 - 8, 547161.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்
காங்கேசன்துறை
ஹாபர் வியூ ஹோட்டல்
THE ONE AND ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH



வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
TFC
த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
COLOMBO Studio

பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# மீன்பிடித் திட்டக்கடனைச் செலுத்த மீண்டும் கால அவகாசம்

(திருகோணமலை)

''திருகோணமலை மாவட்டத்தில் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட கடனை மீளச் செலுத்துவதற்குமேலும் இரண்டு மாதகால அவகாசம் வழங்கப்படும்.

இவ்வாறு இலங்கை வங்கியின் திருகோணமலை மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெற்ற வங்கிஅதிகாரிகளிற்கும் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளிற்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் இறுதியில் முடிவு செய்யப்பட்டதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கலந்துரையாடலின் போது மீனவர்கள் எதிர்நோக்குப் பல்வேறு பொருளாதாரப் பிரச்னைகள்பற்றி ஆராயப் பட்டதாகவும், அப்போது அண்மைக்காலச் சம்பவங்களினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், நஷ்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாகவும் இதனால் வள்ளங்களைச் சுவீகரிக்கும் தமதுமுன்னைய நடவடிக்கையினை இரண்டு மாதகாலத்திற்குப் பிற்போடுவதற்கு வங்சி அதிகாரிகள் முன்வந்ததாகவும் நம்பகரமாகத்தெரிய வருகிறது.

இவ்வாறு வழங்கப்படும்கால அவகாசம் மீனவருக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று தெரிவிக்கும் மேற்படி வட்டாரங்கள் இச்சந்தர்ப்பத்தை அவர்கள் நல்லமுறையில்பயன்படுத்தி நன்மையடைய வேண்டும். இதனை விளக்குவதற்காக சல்லி, இறக்கக்கண்டி 10ம் குறிச்சி போன்ற மீனவர் அதிகமாக வாழும் பகுதிகளில் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யவிருப்பதாகவும் தெரிவித்தன.

இலங்கை வங்கியினருக்கும், மீன்பிடித் திணைக்களத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் வங்கியின்சார்பில் மாவட்ட முகாமையாளர் திரு. வீ. விக்னேஸ்வரனும், பிரதான கிளை முகாமையாளர் திரு. கே, சண்

[10ம் பக்கம்பார்க்க

## நாரந்தனை முருகன் கோவில் புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை — சரவணை கர்ணன்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் மிகவும் சிறப்பாகவும் துரிதமாகவும் நடைபெற்று வருகின்றது.

இக்கோவில் மகாகும்பாஷேகம் பெப்ரவரி மாதம் 6-ந் திகதி நடைபெறவிருப்பதாக ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

இவ்வாலயத் திருப்பணிக்கு 40 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகிவிட்டதாகவும் தற்போது வர்ண வேலைகள் நடைபெறுவதாகவும் கும்பாபிஷேகத்தை மிகவும் சிறப்பாக நிகழ்த்த பொதுமக்களின் ஆதரவைப் பரிபாலனசபை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

## யாருடைய மூக்குக்கண்ணாடி

வடபகுதி பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தைச் சேர்ந்ததிரு. கே. ஸ்ரீமோகன் என்பவர் தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் கோவில்பஸ் நிலையத் தருகில்ஒரு மூக்குக்கண்ணாடியைக் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய உபதபாற் கந்தோர்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செம்பியன்பற்று கிராமத்தில் புதிய உபதபால் நிலையம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை தபால் தந்தித் தொடர்புகள்அமைச்சு வழங்கியுள்ளது.

இந்த உபதபால் நிலையத்தின் உபஅதிபராக திரு. பி ஆர். மதுரநாயகம் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## குருநாகல் போட்டிக்கு கிளிநொச்சி வீராங்கனை தெரிவு!

(கிளிநொச்சி)

விளையாட்டமைச்சு அகில இலங்கை ரீதியில் விளையாட்டுப் போட்டியொன்றினை நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 6, 7, 8ந் திகதிகளில் குருநாகலில் இப்போட்டி நடைபெறும்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இப்போட்டியில் பங்குபெற ஒரே ஒரு வீராங்கனை மட்டுமே தெரிவாகியுள்ளார். கிளிநொச்சிப் பகுதியில் விளையாட்டுத்துறையில் இல சாதனைகளை நிலைநாட்டிய இராமநாதன் சுகுணா என்பவரே இந்த வீராங்கனை யாவார். இவர் வடமாகாண ரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் 1500 மீற்றர் ஓட்டம், 12 மைல் சைக்கிள் ஓட்டம் ஆகியவற்றில் முதலாமிடத்தை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [கி]

## "கூட்டுறவு இயக்கங்கள் திறமையாக இயங்குகின்றன" ஜேர்மன் பெண்கள் பாராட்டு

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் திறமையான முறையில் இயங்கி வருகின்றனர். பலநோக்குக் கூட்டுறசங்கங்களின் மகளிர் குழுக்கள் சமூகப்பணிகளில் ஆர்வத்துடன் மிகச் சிறந்தமுறையில் இயங்கிவருவது பாராட்டப்படவேண்டியதாகும்.''

இவ்வாறு, வடபகுதி கூட்டுறவு அமைப்பு பற்றி ஆராயுமுகமாக யாழ். மாவட்டத்திற்கு வந்திருந்த மேற்குஜேர்மனியைச் சேர்ந்த செல்விகளான பெற்ருரெ பிஸக், மேரியா றிங்ளா ஆகிய இரு பெண்களும் தெரிவித்தனர்.

மேற்கு ஜேர்மனி நியூறெம்பேர்க் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மாணவிகளான இவர்கள் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் பற்றி ஆராய்வதற்காக இங்கு வந்துள்ளனர். அவர்கள் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

கூட்டுறவுச் சங்கங்கள் கிராமிய அபிவிருத்திக்கு எவ்வகைகளில்உதவும் என்பதைப் பற்றி நாம் ஆராய்கின்றோம். இலங்கையில் உள்ளது போன்று மேற்குஜேர்மனியில் கூட்டுறவு இயக்க அமைப்பு இல்லை. எமக்கு அபிவிருத்திகளிலும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் அதிக அக்கறை உண்டு. எனவே அரச அல்லது சுயேட்சையான நிறுவனங்களோடு பல்வேறுபட்ட கூட்டுறவுச் சங்கங்களை ஒப்பிட்டு, ஆராய்ந்து, குறிப்பிட்ட சங்கங்கள் கிராம அபிவிருத்திக்கு எவ்வகையில் உதவுகின்றன என்பதை அறிய வேண்டும். இங்கு இயங்கும் தெங்குப் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் புதுமையானவை. பனம் பொருட்களில் இருந்து தயாரிக்கப்பட்ட பொருட்களும், பண்டங்களும் எம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளன என்று கூறினர்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



உரும்பராய்
திரு. இளையதம்பி கந்தையாஅவர்கள்
[மலாயன் பென்சனர்]

அன்புத் தெய்வமாக எம்மிடையே வாழ்ந்து 29-11-1982 ல் அமரத்துவம் எய்திய தங்கள் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியுற இப்புண்ணிய தினத்தில் நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், சகோதரர்.

ஆனந்த பவனம்
திருவீதி,
உரும்பராய்.
18 - 11 - 1983
9965

## 5-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

ய. லீயோ



உதிர்வு: 18-11-1978

அன்பின் பிறப்பிடமாய் ஆசையின் உருவாய் எம்மைத் தவிர்க்க விட்ட உமது திடீர் மறைவு இன்றுடன் ஐந்து வருடங்கள் சென்றாலும் உம் நினைவு எங்களை விட்டு என்றுமே நீங்காது.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரி, மாமி, மச்சான்மார்கள், மச்சாள், மற்றும் உறவினர்கள்.

54, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
(9972)


## நெஸ்லே லங்கா லிமிட்.

பங்கு விண்ணப்பதாரிகளுக்கான

### அறிவித்தல்

மேற்படி கம்பனியின் பகிரங்க பங்கு வழங்கலுக்காக 1983 பெப்ரவரி 21ஆம் திகதி முதல் 1983 ஏப்ரல் 29ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்கள், ஒதுக்கீட்டு கடிதங்கள், பங்கு சான்றிதழ்கள் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான ஏதாவது அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ளாவிடின் 1983 டிசம்பர் 15ம் திகதிக்கு முன் கீழே பதவி குறிப்பிடப்பட்டுள்ளவருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சட்ட உத்தியோகத்தர்,
நெஸ்லே லங்கா லிமிட்.,
440, டார்லி ரேட்,
கொழும்பு-10.
தொலைபேசி: 597821-2-3
Nestle
(9977)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
ஊரும் உறவும்
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-30
நாகேஷ் - விஜயலலிதா
தேன் கிண்ணம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
சிவகெங்கைச்சீமை

ராஜா (யாழ் நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00, 9-30
ராஜீவ் - ஜோதி ஸ்ரீ நாத்
ரயில் பயணங்களில்
20- 11- 83 முதல்
THE FIGHTERS
(Color-Karate film)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
URSULA ANDRESS
LAURENCE OLIVER
Clash of The Titans
(Entertainment for the Whole Family)
25ந் திகதி முதல்
மூன்றும் பிறை

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய சுந்தரம்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கமல் - ரஜனி - ஜெமினி
ஸ்ரீபிரியா - ஜெயதிபார
அலாவுதீனும் அற்புத விளக்கும்
(கலர் - புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

THE MOST EXPLOSIVE PICTURE OF THE YEAR
Regal Jaffna
Daily 10-30 a. m. 2-30 4-45, 7-00 only
CHARLES BRONSON..
TELEFON
a terrifying action packed-adventure
வெகுவிரைவில்
பயணங்கள் முடிவதில்லை

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
If I have seen it; you better see it. This is the film not to be missed.
36th Chamber of Shaoline
தினசரி 4 காட்சிகள்

## ஈச்சமோட்டை கொலை வழக்கு:

# இரண்டு சாட்சிகள் வெளிநாடு சென்றதாக பொலிஸார் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை கொலை வழக்கில் சாட்சிகள் இருவர் வெளிநாடு சென்றுவிட்டார்கள் என பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஈச்சமோட்டையில், செல்வரத்தினம் கபிரியலே, தட்சணாமூர்த்தி லோறன்ஸ், நிதத்வென கமகே ஆகியோர் கொலைசெய்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தவராஜா, சட்டத்தரணி எஸ். கனகசபாபதியின் அனுசரணையுடன் ஆஜரானர். 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆஜரானர்.

பொலிசார் சாட்சியமளிக்கையில் சாட்சிகளான ரட்ணராசா, அந்தோனிப்பிள்ளை ஆகியோர் வெளிநாடு சென்றுவிட்டதாகத் தெரிவித்தனர். திருமதி. மரியதாஸ் சாட்சியமளித்ததைத் தொடர்ந்துவிசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## வடக்கு...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவது, அந்த மகாநாட்டில் இதனைக் கூறவேண்டும். வட பகுதி பிரதிநிதிகள் சபையில் இல்லாதது நாட்டுக்கு நஷ்டம் தான்.''

''ஆனல் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக இந்தப் பாராளுமன்றத்துக்கு வந்து, பாராளுமன்றத்தை ஒருமேடையாகப் பயன்படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது. அவர்களுடன் இணைந்து, சேவையாற்றவும் முடியாது. வடக்கு எம்.பீக்கள் இங்கு வரவேண்டும். அபிவிருத்திக்குத் தமது பங்கை அளிக்கவேண்டும். பிரிவினை பேசி வேறு நாடுகளுக்குப் பெருமை தேடித்தரக் கூடாது. நிதானமாகப் பேசவேண்டும். பிரிவினை வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை. ஒருமைப்பாடு பற்றியே பேசத் தயாராகவுள்ளோம்.''

## பார்த்தசாரதி...

(10ம் பக்கம் பார்க்க)

இப்பேச்சு வார்த்தையின் போது திரு. பார்த்தசாரதி அண்மையில் தான் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது தெரிவிக்கப்பட்ட சில யோசனைகள்பற்றியும் இவர்களிடம் விளக்கிக் கூறினர்.

இலங்கைத் தமிழ்த் தலைவர்களுக்கும் திரு பார்த்தசாரதிக்கும் இடையிலானபேச்சுவார்த்தைகள் இன்று மீண்டும் புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது. (வெ)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரதி கடந்த ஜூலை மாதம் இலங்கையில் இடம் பெற்ற இனக்கலவரங்களையடுத்து இந்தியா வந்துள்ள இலங்கை மக்களின் பிரச்னை தொடர்பாகவும் அண்மையில் இலங்கை ஜனதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தார்'' என்றார். (வெ)

## சிறுபான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழ் பேசும் மக்கள் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்'' என்று கூறினர்.

## மீன்பிடி---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

முகமூர்த்தியும், மீன்பிடித் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. முனசிங்க மற்றும் திணைக்கள ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## இந்திராவுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசும், சிறப்பாக தமிழ்நாடு மாநில அரசும் அதிக அக்கறைகாட்டி வருகின்றது.''

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ர். ஜயவர்த்தன கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினர். இந்நாட்டு இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படுத்துவதற்கு உகந்த யோசனைகள் எதுவும் என் கவனத்துக்குக் கொண்டு வரப்படுமானல் அவைகளை ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளவேண்டும் என நான் கருதினல் அவைகளை பிரதான அரசியல் கட்சிகளின் ஆலோசனைக்கு விடப்படும். பொது ஸ்தாபனங்களின் கருத்தும் அறியப்படும். எமது கட்சியின் முன் வைக்கப்படும். அதன் பின் அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்பட்டு விவாதிக்கப்பட்டு சட்ட உருவம் கொடுக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதற்கு முன் அவசியமானல் முழு நாட்டு மக்களின் கருத்து அறியப்படுமென்று ஜனதிபதி கூறினர்.

எமது மக்கள்மீது ஒரு ஜே. ஆர்.—இந்திரா ஒப்பந்தத்தை அல்லது ஜே. ஆர். — அமிர்தலிங்கம் ஒப்பந்தத்தைத் திணிக்க விரும்பவில்லை. அவ்வாறன ஒப்பந்தங்களை நாம் முன்பு கண்டுவிட்டோம். அவைகளில் சில துரதிருஷ்டவசமான முடிவுகளை எதிர்நோக்க நேர்ந்தது. மக்கள் தமது நலனுக்கு உகந்தது எது என்பதை அறிய வேண்டும். நானும் என்னுடன் ஒத்துப்போகும் அமைச்சர்களும் அந்த யோசனைகளை மக்கள் முன் வைத்து அவைகளை ஏற்றுக்கொள்ளாத நிலையில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி விளக்குவோம். அடிக்கடி ஏற்பட்டுவரும் முரண்பாடுகள் வன்முறையாக மாறி வருவதை நாம் தவிர்க்கவேண்டும்.

நாட்டில் ஸ்திரமின்மை, வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போவது, எமது வளர்ச்சித்திட்டங்களைக் கைவிடுவது மட்டுமல்ல நமது ஜனநாயக அமைப்பையே பலவீனப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறிய ஜனதிபதி நான் இந்தநாட்டின் அரசியல் தலைவனக இருக்கும்வரை அவ்வாறு நடப்பதை விரும்பவில்லை.

இறுதியாக பயனுள்ளவை என்றுகருதி அரசாங்கம்ஏற்றுக்கொண்டு அமுல் நடத்த விரும்பும் யோசனைகளை மக்கள் முன் வைத்து அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு என்னல் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன்'' என்று குறிப்பிட்டார்.

## வீடு திரும்பி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். வீட்டில் நேற்றுப் பலரும் அவரைச் சந்தித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 1ம் திகதி தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங்கமும், திரு கோவை மகேசனும் கைதுசெய்யப்பட்டனர். [மா]

# சிறைக்கைதி ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர், சுகவீனமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர்.

குருநாகலைச்சேர்ந்த விக்கிரமசிங்க (25 வயது) என்பவரே மரணமானவராவார்.

இவர் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் விவாகம் செய்து வசித்து வந்தவர். களப்பு, கஞ்சா விற்றது சம்பந்தமாக யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணையின் பின்னர் சிறைத்தண்டனைக்குட்படுத்தப்பட்டார்.

அக்காலத்தில் சிறையிலிருந்து தப்பி ஓடி மீண்டும் சிறைச்சாலையில் சரணடைந்தவர்.

யாழ். ஆஸ்பத்திரியில்கடந்த 10 நாட்கள் சிகிச்சைபெற்று வந்த இவர் நேற்று மரணமானதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## 16 லட்சம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையடிக்கப்பட்டது.

இப்பணம் ஒய்வூதியம் வழங்குவதற்காக யாழ், தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதே தினம் மானிப்பாய் இலங்கை வங்கியிலும் 2 லட்சத்து 38,000 ரூபா இதே பாணியில் கொள்ளையடிக்கப்பட்டது.

இத்தகவல்களை ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் யனகே பத்திரிகைகளுக்காக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-வெ)

# எலிஸபெத் மகாராணி இந்தியா வந்துசேர்ந்தார்

(புதுடில்லி)

பிரிட்டனின் இரண்டாவது எலிஸபெத் மகாராணி பத்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியா வந்து சேர்ந்தார்.

எலிஸபெத் மகாராணியுடன் அவரது கணவர் எடின்பரோ கோமகனும் இந்தியாவுக்குவிஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவர்களை விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், ஜனதிபதி திரு. ஸெயில்சிங்கும் வரவேற்றனர்.

இம்மாதம் 23ம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் மகாநாட்டிலும் எலிஸபெத் மகாராணி கலந்துகொள்ளவுள்ளார். (வெ)

# இப்படியும் நடக்கிறது

அடுத்தமாதம், கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நூறுநாள் பாதயாத்திரை மேற்கொள்ளவிருக்கும் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன, இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார்.

தமது குழுவினருடன் நேற்றுக்காலை ''ஈழநாடு'' அலுவலகம் வந்தார். பல கசப்பன 'உண்மை'களை மனம் விட்டுப்பேசினர்.

ஒரு கட்டத்தில்; கொழும்பு ஆங்கிலத் தினசரியொன்றில் வெளியாகியிருந்த அவரது கருத்துக்கள் குறித்து, குறிப்பாக, கலாநிதி ஆரியரத்ன தெரிவித்திருந்ததாக இடம் பெற்றிருந்த ''சிங்கள பௌத்த இரத்தம்...'' எனும் கருத்து பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. இதனை முற்றும் முழுவதுமாக மறுத்து விட்ட கலாநிதி; இது குறித்து தாம் மறுப்புத்தெரிவித்ததாகவும் ஆனலும் மறுப்பை அப்பத்திரிகை வெளியிடவில்லை என்றும் வருத்தம் தெரிவித்தார்!

பத்திரிகை உலகில் என்ன எல்லாம், எப்படி எப்படி நடக்கிறது!

— ஊடுருவி

# தனியார்துறை ஊழியர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தனியார்துறை ஊழியர்களின் பெயர் விபரங்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் அந்தந்தப் பகுதி விசேட சேவை அலுவலர்களைப் பணித்துள்ளார்.

வன்செயல்கள் இடம்பெற்ற பகுதிகளில் பாதிப்புக்குள்ளான கிறுகடைகள், பெட்டிக்கடைகள், அங்காடி வியாபாரம் செய்தவர்களும் இவ் விபரப் பட்டியலில் இடம் பெறுவார்கள் இவர்கள் தாங்கள் வியாபாரம் செய்தமைக்குரிய அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் 1,500 ரூபா வரை நிவாரண உதவிப்பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கு 5-ம், 6-ம், 7-ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (மா)

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறை நடமாடிய மூவர் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் சந்தேக நபர்களான பிரேம்குமார், சந்திரசேகரன், கண்ணதாசன் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

# மரண அறிவித்தல்

## சுவாமிநாதர் சண்முகம்

(இளைப்பாறிய தபால் தந்தி தொடர்பு அத்தியட்சகர்)

சுன்னுகம் தெற்கு சுவாமிநாதர் சண்முகம் காலமாகிவிட்டார். இவர் வள்ளிப்பிள்ளையின் அருமைக் கணவரும், காலம் சென்ற திருமதி பொன்னம்பலம் அவர்களின் சகோதரரும், யோகநாதன் (டயர் கூட்டுத்தாபனம்) சிவகுருநாதன், பேரின்பநாதன் (கணக்காளர் லண்டன்) ஆகியோரின் அருமைத்தந்தையாரும் செம்மனச்செல்வி, மகேஸ்வரி, புஸ்பரஞ்சினி ஆகியோரின் அருமைமாமனரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் 18-11-83 வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறும்.

10000 தகவல்: ச. யோகநாதன்

# மரண அறிவித்தல்

## ஆ. பத்மநாதன் (இலங்கை வங்கி)

சிவப்பிரகாசம் ரேட்டைச் சேர்ந்த ஆ. பத்மநாதன் காலமானர். இவர் ராமநாயகியின் (ராணி) அன்புக்கணவரும், பத்மதர்ஷினியின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம்பிள்ளை, நாகரத்தினம் தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற குமாரவேற்பிள்ளை, கண்மணியம்மாவின் அருமை மருமகனுமாவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (19-11-83) சனிக்கிழமை (நாளை) காலை 10-00 மணியளவில் யாழ்ப்பாணம் இல. 8 ஐயனர் கோவில் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்கள் உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் 9971

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 88-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.